பாலர் கல்வி

தொகுதி 5	1940 ஹூ ஏப்ரல் மீ விக்கிரம ஹூ சித்திரை மீ	பகுதி 1

பிள்ளையின் மனம்

[390-ம் பக்கத் தொடர்ச்சி.]

(M. Subramaniam, *Assistant, E.L.M., Fabricius High School, Madras.*)

XVI. ஞாபகசக்தி (Memory)

ஞாபக விருத்திப் பயிற்சிகளும்—போதனமுறைகளும்

I. ஓர் இலக்ஷியம்

பள்ளிக்கூடங்களில் அவ்வப்போது முறைப்படி நடத்தவேண்டிய பரீக்ஷைகளில் சிறுவர்கள் எப்படியாவது தேறிவிடவேண்டும் என்பதே ஆசிரியர்களுடைய தற்போது நோக்கமாக இருக்கின்றது. இந்த லக்ஷியத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது சகல கல்வி திட்டங்களும். இந்தத் திட்டங்களெல்லாம் பிள்ளைகளின் மூளைகளை ஓர் இயந்திரம்போல் செய்கின்றனவே தவிர நுட்பமாகச் சிந்திக்கும் சக்தியையும் சுயாதீன உயர்வையும் அதிகமாக உண்டுபண்ணுவதில்லை. வாழ்க்கையில் நேரிடும்படியான பிரச்னைகளை சிக்கறுக்கத் தகுந்த கல்வியும் அறிவும் சரியானபடி இராததற்குக் காரணம் திறமான மனோவிருத்தியும் ஞாபகசக்தியும் இராததனால்தான். பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் தங்களிடம் கல்வி கற்கும் மாணுக்கர்கள் எப்படியாகிலும் "பாஸ்" பண்ணவேண்டும் என்னும் ஒரே இலக்ஷியத்தைக்கொண்டு அதற்குத் தகுந்த உபாயங்களையும் முறைகளையும் அனுஷ்டித்து அவர்களுடைய ஞாபக சக்தியை விருத்தியாக்குகின்றார்கள். உருப்போடுதல் (Repetition) மனப்பாடம் பண்ணுதல் (Learning by heart) குருட்டுப்பாடம் செய்தல் (Cramming) செயற்கைச் சூத்திரங்களை உபயோகித்தல் (Artificial Mnemonics) முதலிய யுக்தி முறைகளின் மூலமாய்ச் சிற்சில ஆசிரியர்கள் தங்கள் மாணுக்கர்களுடைய ஞாபகத்தை விருத்தி செய்தாலும், இவை எல்லாம் பரீக்ஷார்த்தமானவைகளேயாகும்.

உருப்போடுதல்

இது ஒரு தொல்லையான வேலை. ஆயினும் சிறுவர்களுக்கு வெகுவாய் அவசியமானதே. கொஞ்சம் கூர் இல்லாத ஆணியை திரும்பத் திரும்ப அடித்து மெள்ள ஒரு சுவற்றில் புகுத்துவதுபோல் ஒரு விஷயத்தைப் பலதரம் திரும்பத்திரும்பச் சொல்வதனால் மனத்தினுள் சென்று பதிகின்றது. இயல்பாகச் சற்று குறைந்த புத்தியுள்ள சிறுவனுடைய மனத்தில் விஷயங்கள் அடிக்கடிச் சொல்வதனால்தான் நிலைத்திருக்கின்றன. ஒரு பொருளை அடிக்கடிக் கேட்பதனாலும், காண்பதனாலும், உணர்ந்து அனுபவிப்பதினாலும், குறைவான புத்தியுடையவனுக்கு ஞாபகத்தில் அது வலிய பதிந்துவிடுகிறது. சிறுவர்களுடைய மனம் எப்போதும் ஒரு நூதனத்தில் அதிக ஆசையாயிருக்கும். திருப்பித்திருப்பிச் சொன்னவற்றில் அதிகமாய் விருப்பம் இருக்காது. இது உண்மை. ஆயினும் சில விஷயங்களைக் கட்டாயம் ஞாபகத்தில் வைத்து ஒப்பிக்கும்படி செய்யவேண்டுமானால், இப்படித்தான் சிலவேளை செய்யவேண்டும். இயல்பாகச் சிறுவர்களுடைய கவன சக்தி ஒன்றில் நிலைத்திராமல் அலைபாய்வது சாதாரணம்.

இப்படி நிலைத்திராத கவனத்தில் விஷயங்கள் சீக்கிரத்தில் தங்கா. நிலைத்திராத கவன சக்தி உள்ள மாணவன் கட்டாயமாக ஒன்றைப் பன்முறைச் சொல்லிக்கொண்டுதான் படிக்கவேண்டும். இத்தகைய மாணவர்களுக்கு ஆசிரியர்களும் திருப்பித்திருப்பித்தான் சொல்லவேண்டும். மேலும் ஆரம்பத்தில் ஒரு செய்யுளில் அதிக உற்சாகமும், அக்கரையும் சிரத்தையும் எளிதில் சிறுவனுக்கு உண்டாவதில்லை. அதைப் பன்முறை உரக்கப் படிப்பதனாலும், படிக்கக் கேட்பதனாலும், சொல்வதாலும், சொல்லக்கேட்பதாலும், எழுதிப் பார்ப்பதனாலும் அதில் விருப்பம் படிப்படியாக உண்டாகிறது. இதனால் ஞாபகத்தில் பதிகின்றது. ஆயினும் துவக்கத்தில் இப்படி ஒப்பிப்பதில் வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். சொற்பிழை, எழுத்துப் பிழை, உச்சரிப்புப் பிழை முதலியன நேரிடக்கூடும். கூடுமானவரையில் நல்ல தேர்ச்சி அடையுமட்டும் புத்தகங்களின் உதவியும் ஆசிரியரின் உதவியும் வேண்டும். எளிதில் ஞாபகப்படுத்திக்கொள்வதற்காகவே, எதுகை, மோனை, பிராசம், சொல்லணி, பொருளணி முதலியவைகளை அமைத்துக் கவிஞர்கள் செய்யுள் இயற்றியுள்ளார்கள். வேத பாடசாலைகளில் வேதாத்தியனம் செய்யும் மாணவர்கள் உருப்போடும் விஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொள்வதை கவனிக்கத்தக்கது. சேர்க்கை நினைப்புக்களை யொட்டி ஒன்றை ஞாபகத்தில் பொருத்திக்கொள்ளும் தத்துவம் சிறுவர்களுக்கு மிகவும் கஷ்டமானதாலும், கவனசக்தி ஒன்றில் நிலைத்திருப்பது கடினமானதாலும், இளமைப் பருவத்தில் அவ்வப்போது சிற்சில பொருட்களை கட்டாயமாகப் படிக்கவேண்டியதாலும், ஞாபகசக்தியும் விருத்தியாகவேண்டியதாலும், உருப்போடும் பழக்கம் சாதகமானதேயாகும்.

குருட்டுப் பாடம்

சில பிள்ளைகள் பாடங்களின் பொருள் தெரிந்துகொள்ளாமல் அவற்றை நெட்டுருப் போட்டு அப்படியே ஒப்பிக்கிறார்கள். இதனால், அவர்களுடைய ஞாபகத்தில் "சொல்லுருவங்கள்" மாத்திரம் அமைகின்றனவே தவிர "பொருளுருவங்கள்" அமைகிறதில்லை. இது வெகுதாழ்ந்த மனத்தன்மையைச் சேரும். குருட்டுப் பாடம் செய்யும்போது, வாய் மாத்திரம் சொற்களை உச்சரித்துக்கொண்டு, மனமும் கவனமும் வேறு இடத்தில் இருப்பதை நாம் சில பிள்ளைகளிடத்தில் பார்க்கலாம். இப்படிக் குருட்டுப் பாடம் செய்யும் சிறுவர்கள், ஏதாவது ஒருபடி மறந்துவிட்டால், திரும்பவும் முதலிலிருந்து சொன்னால்தான் சரியாக மறந்த பாகம் நினைப்புக்குவரும். ஒன்றைப் படிக்கும்போது அதை இதர பொருட்களோடு சம்பந்தப்படுத்தி, அது நமக்குத் தேவையான காலத்தில் வந்து எந்த அளவு உபயோகமாக வேண்டுமோ அந்த அளவு மாத்திரம் தக்கபடி தடுமாற்றமின்றி வந்தால், அது ஒரு சிறந்த அனுபவமும் பிரயோஜனமும் ஆகும். இவ்விதமான அனுபவத்தையும், பிரயோஜனத்தையும் கருதாமலும், நன்றாக அறியாமலும், ஞாபகத்தில் வைப்பது குருட்டுப்பாடமாகும். உதாரணமாக ஒரு சிறுவன் வாய்பாட்டைக் கண்ணை மூடிக்கொண்டு தலைகீழாக ஒப்பித்து அதை தக்க தருணத்தில் உபயோகப்படுத்தாவிட்டால், அவ்வாய்பாடு அவன் மூளைக்குப் பாரமே தவிர அதனால் பிரயோஜனமில்லை. ஞாபகசக்தி எப்போதும் மனோவேலைகளுக்கு உதவியா யிருப்பதனாலும், ஒன்றை ஆராய்ந்து சிந்திக்கும் சக்தி மனத்திற்கே உரியதாலும், ஞாபகசக்தியும் சிந்தனை சக்தியில் சேர்ந்து வாழ்க்கைப் பிரச்னைகளைச் சிக்கறுக்க உபயோகமாகாவிட்டால் அச்சக்தியால் சிறுவர்களுக்கு என்ன பலன்? எனவே குருட்டுப்பாடம் செய்கிறவன் ஒருவேளை ஒரு வாய்பாட்டையோ செய்யுளையோ வகுப்பில் அர்த்தம் தெரியாமல் ஆசிரியருக்குமுன் ஒப்பித்து பெருமை பெற்றுக்கொண்டாலும், பிற்காலத்தில் அது உதவாவிட்டால் அது நகைப்பையே தரும். மேலும், கேட்ட கேள்விக்குத் தக்க விடையளிக்கச் சரியான ஞாபகசக்தியும், சிந்திக்கும் திறமையும், கவன முயற்சியும் வேண்டுமாகையால், குருட்டுப்பாடம் செய்பவன், மேற்கூறிய விஷயங்களைப் பற்றி நினைக்காமலே ஒன்றை நெட்டுருப்போட்டு வாய்க்கு வந்தபடி பரீக்ஷயில் எழுதுகின்றான். அல்லது வேண்டாத பாகத்தை அப்படியே எழுதுகிறான். குருட்டுப்பாடம் பண்ணி விஷயங்களை ஞாபகத்தில் சேர்த்துவைப்பவன் எப்போதும் ஒன்றைச் சேர்க்கும் லோபியைப்போலவும், அல்லது பித்தனைப்போல் தாறுமாறான பதில் சொல்பவனைப் போலவும் இருக்கின்றான். வாழ்க்கை பிரச்னைகளைச் சிக்கறுக்க உபயோகப்படாமல் இருக்கும் ஞாபகசக்தி விஷயமாய் பால்டுவின் ஜோஸப் (Baldwin Joseph) என்பவர் "யோசிக்கும் சக்தி சாரமற்றதுபோல் நினைத்து, வெறும் ஞாபக சக்தியை மாத்திரம் உபயோகமற்ற விஷயங்களைக்கொண்டு விருத்தியாக்கு

வது, தற்போதுள்ள சிற்சில போதனுமுறைகளின் தத்துவமாக இருக்கிறது. சேர்ப்புக்கெனவே ஏற்பட்ட வெறும் களஞ்சியம்போல் ஞாபக சக்தியைச் சேர்த்து வைக்கும் சக்தி எனக் கருதி அதை நிரப்பி, யாதொரு விருத்தியும் அடையாவண்ணம் அதைக் காப்பாற்றி வைக்கும் பேதமையைக் காட்டிலும் பேதமையும் உண்டோ''—என்கிருர். ஆகையால் சொல்லையும், பொருளையும், உபயோகத்தையும், நோக்கத்தையும், கொள்ளாமல் ஒன்றைக் குருட்டுப்பாடம் செய்து ஞாபகத்தில் வைக்கும் மாணுக்கனுடைய நிலைமை பரிதாபமானது.

மனப்பாடம் செய்வது.

மனப்பாடம் செய்வது உயர்ந்த தன்மையைச் சேர்ந்தது. ஒரு கதையில் முக்கியமான பாகத்தையோ, ஒரு நாடகத்தில் சில அழகான நீதி வாக்கியங்களையோ, ஒரு பாடத்தில் பிரதான ஒரு பகுதியையோ, மனப்பாடம் செய்யவேண்டியது அவசியம்தான். சில சந்தர்ப்பங்களில் ஒன்றை மேற்கோளாகக் காட்டவேண்டுமானுல் மனப்பாடம் செய்தால் தான் முடியும். இது சொல்வன்மை தருவதோடு, உண்மையையும் காட்டும். ஆசிரியர்கள் பாட முடிவில், பாட சாரத்தைக் கரும்பலகையில் எழுதுவது உசிதமாகும். சிறந்த நாடகங்களில் உள்ள சில அழகான பாகங்கள், பிரயோஜனமான கணித சூத்திரங்கள், காவிய வருணனைகள், உபமான உபமேயங்கள், மேன்மையான சில வசனங்கள், நீதிமொழிகள், ஸ்தோத்திரப்பாக்கள், இன்னிசைப் பாடல்கள், ஒழுக்க விதிகள், ஆர்வம் ததும்பிய தேசீய கீதங்கள், இயற்கை வருணனைகள், அழுத்தமான கூற்றுக்கள் (Terse Sayings) சாஸ்திர விதிகள், முதலிய சிறந்த விஷயங்களை இளமைப் பருவத்தில் மனப்பாடம் செய்விப்பது ஆசிரியருடைய விசேஷ கடமையாகும். சிறுவயதில் வேண்டியவைகளைத் தகுந்த முறையில் மனப்பாடம் செய்யாத சிலர், பெரியோரானபோது இதைக் குறித்து வருந்துவாரும் உள்ளர். இப்படி மனப்பாடம் செய்வதற்குப் பிள்ளைகளின் உற்சாகத்தையும் அக்கரையையும் தூண்ட, ஆசிரியர்கள் ஒவ்வொரு பாடத்தையும் திரும்பத்திரும்ப சாரமற்றதுபோல் சொல்லிக்கொண்டிராமல், அதை நன்ருக விஸ்தரித்தும், விளக்கியும், தொகுத்தும், முக்கியமானதைக் கூறியும், வரவேண்டும்.

செயற்கைச் சூத்திரங்கள்

சரித்திர சம்பந்தமான விஷயங்களையும் வருஷங்களையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள சில சூத்திரங்களை மனப்பாடம் செய்வது வெகு சாதாரணம். சில சொற்களின் முதலெழுத்துக்களை எல்லாம் ஒன்ருகக் கூட்டி ஓர் சொல்லாக அமைத்தும், சில எழுத்துக்களைச் சில எண்களோடு தொகுத்தும் மனத்தில் அமைத்துக்கொள்ள முயல்வது சிறுவர்களுடைய இயல்பு. உதாரணமாக, முதலாம் சீக் யுத்தத்தில் நடந்த முக்கியமான சண்டை இடங்களாகிய சோப்ரயான், பிரோஜ்ஷா,

அலிவால், முட்கி என்பதை "சோபி அழு" என்றும், கணிதத்தில் சுருக்குதல் (Simplification) செய்யவேண்டிய முறைகளாகிய (1) Bracket (2) of or Multiply, (3) Divide, (4) Into, (5) plus, (6) Subtract, என்புதை "Bodips" என்றும், ஞாபகத்தில் வைத்துக்கொள்ள யுக்தி செய்வதுண்டு. இத்தகைய முறைகள் சரியானவை யல்ல. ஏனென்றால் இச் சூத்திரங்களை சில சமயங்களில் மறந்து போய்விடலாம். அல்லது பயிற்சிகளுக்குத்தகுந்த சொற்களும் கிடைப்பது கஷ்டமாக இருக்கும். அல்லது இச் சூத்திரங்கள் மாறுன அர்த்தங்களையும் தரலாம். இத்தகைய யுக்திகளைக் குருட்டுப் பாடத்தில்தான் சேர்க்கவேண்டும். இது இயற்கையாகக் கற்றுக்கொள்வதற்கு மாருக இருக்கிறது. ஆனல் நல்ல ஞாபகசக்தி எது ?

நல்ல ஞாபகசக்தியின் இரகசியம்

மனிதன் பகுத்தறிவுள்ளவன். பகுத்தறிவை விருத்தியாக்கி யோசிக்கச்செய்யும் முறையே விசேஷமானது. இம்முறை (Rational System)ப் பிரகாரம் பொருட்களை ஞாபகத்தில் அமைப்பது, நீடித்து இருக்கும் தன்மையுள்ளது. இம்முறையே வாழ்க்கைப் பிரச்னைகளை ஆராய்ந்து அறியவும், நிதானிக்கவும், சீர்தூக்கி மதிப்பிடவும் உதவும். "ஞாபகத்தின் சாதனை யோசிக்கும் சாதனை" (The art of Memory is the art of thinking) என்று ஜேம்ஸ் நிபுணர் கூறுகிறர். எவன் ஒருவன் தன் அனுபவங்களைக் குறித்து அதிகமாக ஆழ்ந்து யோசித்துப் பார்த்துப் பலவிதமான சேர்க்கை நினைப்புக்களுடன் இணைத்து, வேண்டியபோது வேண்டிய அளவில் அவைகளை நினைப்புக்குக் கொண்டுவந்து பிரயோஜனப்படுத்துகின்றனே, அவனுடைய ஞாபகசக்தியே உத்தமமானது. ஆகையால் எதையும் யோசித்து ஞாபகத்திற் கொள்வது நலம். கண்டதைக் கண்ணுடி போலும், கேட்டதைக் கிளிப்பிள்ளை போலும் சொல்பவனுடைய ஞாபக சக்தியானது இடை மாணுக்கனுடைய இனத்தைச் சேர்ந்தது. மேலும் நல்ல ஞாபக சக்தியின் இரகசியம், ஒவ்வொரு நினைப்பின் இனத்தையும் அதற்குத் தகுந்த இனத்தோடு இணைப்பதில் இருக்கிறது அசம்பாவிதமாய் வேண்டியபடி விஷயங்களைச் சேர்க்கக் கூடாது. பூகோளத்தை வாசகத்தோடும், சரித்திரத்தைக் கணக்கோடும், பாஷா போதனையை விஞ்ஞான பாடத்தோடும் முட்ட விடுவது அவ்வளவு நன்ருக பொருந்தாது. பூகோள பாடங்களுக்குரிய உதாரணங்களும் ஒற்றுமை வேற்றுமைகளும் விஷயச் சேர்க்கைகளும், பூகோளத்தையே ஒட்டி இருப்பது மிகவும் உசிதம். எப்படி வைத்தியன் தன் தொழிலுக்குள்ள விஷயங்களிலும், சோதிடன் தன் வேலைக்குத் தகுந்த கல்விப் பயிற்சியிலும், சிறப்பாக விளங்க முயற்சி செய்வானே, அப்படியே ஒவ்வொரு விஷயத்தையும் அதற்குப் பொருத்தமான, ஒற்றுமை, வேற்றுமை, அண்மை, தொடர்சி முதலிய சேர்க்கை நினைப்புக்களையே உதாரணமாக கொண்டு ஞாபகத்தில் அமைக்கவேண்டும். இதனுல்தான் ஒரு

ஞாபக சக்தி என்பதை விட அநேக ஞாபகசக்திகள் (Memories) என்னும் சொல்வது உண்டு. பூகோளத்திற்குரிய மனோ நிலைமையும், சுற்றுப்புறமும் உண்டானல் பூகோள மனப்பான்மையும் அதற்குத் தகுந்த சிந்திக்கும் சக்தியும் அனுபவங்களும், உதாரணங்களும், கண்ட விஷயங்களும், தானகவே வரவேண்டும். இப்படியே செய்யுளைப் போதிக்கும் போது வேறு செய்யுட்களையே உதாரணமாக கொண்டுவந்து காட்டுவது விசேஷமாகும்.

பொதுவானமுறை என்ன ?

ஞாபக சக்தியானது மனத்தின் ஒரு விசேஷ தன்மை. இது இயல்பாகவே சிலரிடத்தில்தான் உண்டு. இருப்பினும் சில பொதுவான பயிற்சிகளாலும் அப்பியாசங்களாலும் இச் சக்தியை விருத்தியாக்கக் கூடும். பிள்ளைகளுக்கு விருப்பமாக உள்ள பொருட்களை அழகாகவும் தெளிவாகவும் அவர்களுடைய தினசரி அனுபவங்களோடு சேர்க்க வேண்டும். பற்பல எளிய உதாரணங்களால் பொருள் விளங்கச்சொல்ல வேண்டும். உபகரணங்களைச் சரியான முறையில் போதுமான அளவில் உபயோகிக்கவேண்டும்: அனுவசியமானவைகளால் புத்தி குழம்பிவிடும். நேரில் பார்க்கவேண்டியவைகளை நேரில் பார்பது நல்லது. அல்லது தகுந்த படத்தைக்காட்டி விளக்குவது சிலாக்கியம். மேலும் கண்டதை அடிக்கடி மனக்கண் முன் கொணர்தல் (Visualization) சிறந்த செய்யுட்களையும் பாக்களையும் உரக்கப் படிக்கச்செய்தல், அல்லது ஆர்வத்தோடுப் படித்துக்காட்டுதல், எழுதிக்காட்டுதல் முதலியனவும் நல்லவை. கண்டதை விவரித்துக் கூறத் தூண்டுதல், ஒன்றைக் கற்பனை செய்ய உதவி யளித்தல், கற்றவைகளைச் சித்திரமாக எழுதச்செய்தல், கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்ய அப்பியாசங்களைக் கொடுத்தல், தகுந்த மொழிகளைப் (Suitable words) புகுத்தி வாக்கியத்தை அமைக்கச் செய்தல், பிழை திருத்தச் செய்தல், கட்டுரை எழுதச் சொல்லுதல், செய்யுள் போன்றவைகளை மனப்பாடம் செய்யப் பண்ணுதல், வாயால் கதையைச் சொல்லி திரும்ப அதைக் கூறும்படி செய்தல், கரும் பலகையில் எழுதின் பிரதான வாக்கியங்களைக் குறித்த நேரத்திற்குள் படித்து பின்பு கூறும்படி செய்தல், பழய பாடங்களில் சிற்சில கேள்விகளைக் கேட்டல், முதலியவற்றை நேர்மையாக ஆசிரியர் கையாண்டால் சிறுவர்களுடைய ஞாபக சக்தி அதிகரிக்கும். இத்தகைய முறைகளை எவ்வாறு சிலபாடங்களில் அனுசரிப்பது என்பதைப் பார்ப்போம்.

II நம் நோக்கம்

ஒரு பாடத்தைப் பிள்ளைகளுக்குப் போதிக்கும்போது அது அவர்களுடைய ஞாபகத்தில் வேரூன்றி இருக்கவேண்டுமானல் ஆசிரியர்கள் எப்போதும் அவர்களுடைய அனுபவங்களை யொட்டியே செய்ய

வேண்டும். கணக்கு, பூகோளம், செய்யுள் ஒப்பித்தல் முதலிய பாட சம்பந்தமான பொது முறைகளையும் (General Principles) பண்புப் பொருட்களையும் (Abstract Things) ஞாபகத்தில் அழுந்தச் செய்யு முன், பிள்ளைகளுக்கு அவைகளைப்பற்றி பிரத்தியக்ஷ அறிவு இருக்கும்படி கவனிக்க வேண்டும். ஆழ்ந்த கருத்துக்களும், கற்பனை உருவங்களும், பொருள் உருவங்களும் மனத்தில் நீடித்திருக்கப் பொதுஜன சேர்க்கை நினைப்புக்களும் கவனசக்தியும் பிள்ளைகளிடம் அதிகமாக இருக்கவேண்டும். ஐம்புலன்கள் மூலமாய் அவசரமில்லாமல் விஷயங்களை உணரும்படி செய்யவேண்டியதோடு வயது, மனோநிலை பக்குவகாலம் முதலியவைகளையும் இதற்குக் கவனிக்க வேண்டும். இனி மூலாதாரக் கல்வி பள்ளிக்கூடங்களில் (Elementary School) எவ்விதமாகக் கணக்குப் பாடத்தைப் போதித்தால் "கணக்கு ஞாபகசக்தி" விருத்தியாகும் என்பதைப் பார்ப்போம்.

கணித ஞாபக சக்தி

கணித பாடத்தில் அநேகமாய் எல்லாச் சேர்க்கை நினைப்புமுறைகளும் (Laws of Associations) உபயோகிக்கப்பட்டு வருகின்றன. இம்முறைமைகளைச் சிறுவர்கள் ஒருபோதும் அறியார்கள். அவர்களுக்குக் காரண காரிய சம்பந்தமான விஷயங்களைப் போதிப்பதும் புரியாது. எனவே முதலாவது, சுலபமான கணக்குகளைச் சாமர்த்தியமாக யூகித்தறிந்து அதனால் உண்டாகும் நம்பிக்கையையும், வெற்றியையும் அடையும்படி செய்யவேண்டும். இரண்டாவதாக, ஒரு கணக்கைச் செய்ய நுட்பமான வழிகளையும், யோசனைகளையும், வேண்டியபோது தெளிவாகத் தந்து உதவவேண்டும். கடைசியாக பிழை இல்லாத வழிகள் மூலமாய் அடையக்கூடிய சரியான விடையும் வரும்படி உற்சாகப்படுத்த வேண்டும்.

இம்மூன்று முறைகளில் அடங்கிய இரகசியமென்ன?

ஒரு கணக்கு ஞாபகத்தில் ஆழ்ந்து நிலைத்திருக்க வேண்டுமானால், அது சிறுவர்களுடைய அனுபவத்திற்கும் பழக்கத்திற்கும், புதிதாக இருக்கக்கூடாது. பழக்கத்தினால்தான் சேர்க்கை நினைப்புக்களும் சீக்கிரத்தில் உண்டாகும். உதாரணமாக பதினெட்டாம் வாய்ப்பாட்டைப் போதிப்பதற்குமுன் சில சுலபமான தினசரி அனுபவ வாய்க் கணக்குகளைக் கேட்டுப் பிள்ளைகளின் மனத்தை உற்சாகப்படுத்த வேண்டும். பின்பு "பெருக்கலானது கூட்டலின் ஒரு சுருக்க வழி" என்பதைக் காட்ட, பத்தாலும் எட்டாலும் தனித்தனி ஒரு எண்ணைப் பெருக்கிக் கூட்டி வந்த தொகையே சரி என்பதையும் சொல்ல வேண்டும். பிள்ளைகளுடைய சுய முயற்சியாலும், சுய அனுபவத்தாலும், சுய சாமர்த்தியத்தாலும் கண்டறிந்த முறைமையே சிலாக்கியமானதாகையால் அது எளிதில் ஞாபகத்தில் பதிந்துவிடும். ஒவ்வொரு கணக்கையும் திருப்பித் திருப்பி

முன்பின் யோசியாமல் இயந்திரம்போல் செய்வதைப் பார்க்கிலும் நுட்பமாகவும், நிதானமாகவும், யுக்தி முறைகளைப் பிரயோகித்தும் செய்யும்படி ஆசிரியர் தம் மாணுக்கர்களைப் பழக்கவேண்டும். மேலும் எண்களை அழகாகவும், ஒழுங்காகவும், தெளிவாகவும், எழுதிக் காட்டுவதோடு கணக்கு சம்பந்தமான சகல வழிகளையும் பிழை இல்லாமல் ஒருபுறம் விளக்கி எழுதினுல், சிறுவர்கள் அவைகளைச் சந்தோஷத்தோடு ஞாபகத்தில் வைத்துக்கொள்வார்கள். கடினமான கணக்குகளைக் கற்பிப்பதற்கு முந்தி சுலபமானதும், நம்பிக்கை, உற்சாகம், விரைவு முதலிய குணங்களை உண்டாக்கும் தன்மையானதுமான கணக்குகளைத் தரவேண்டும். எப்போதும் சந்தோஷமே சகல பலத்திற்கும் காரணமாகையால், சரியான விடை வந்த உடனே, அதிக குதூகலம் தோன்றி மேன்மேலும் கணக்கு போட ஆர்வம் உண்டாகும். ஆகையால் கீழ்க்கண்ட குறிப்புக்களை ஆசிரியர்கள் அனுசரிப்பது நலமாக இருக்கும்.

சில குறிப்புக்கள்

I புது விதிகளை ஞாபகத்தில் அமைக்க

(1) பிள்ளைகளுடைய அனுபவத்தைக் கொண்டே அவர்களுடைய வாய்மூலமாகப் புது விஷயங்களைத் திரட்டிச் சேர்த்துத் தெளிவாக முறைப்படுத்த வேண்டும்.

(2) இத்தகைய முறைகளைச் சிறுவர்கள் அறிந்துகொண்டார்களா இல்லையா என்பதைப் பரிசோதிக்க சிற்சில சுலபமான மனக்கணக்குகளையும் தரவேண்டும்.

(3) இப்படி மனக்கணக்கு முதலியவற்றின் மூலமாய்ப் பழக்கமடைந்த பிள்ளைகளின் மனத்தில் "செய் முறை உருவம்" அமைந்துவிடுகிறபடியால் அதைக்கொண்டே ஆசிரியரும் இன்னும் கடினமான பொது முறைகளை வகுத்திட வேண்டும்.

II மேற்கூறியவைகளை அதிகமாக அனுசரிக்க

(1) ஒரே காலத்தில் ஒரே விஷயத்தை யோசித்து விடை எழுதுமாறு படிப்படியாக உதாரணங்களைப் பொறுக்கித் தரவேண்டும்.

(2) சரியான விடையின் பொருட்டுச் செய்யவேண்டிய ஒவ்வொரு வழிக்கும் போதுமான விஸ்தரிப்பையும் தந்து உதவவேண்டும்.

(3) சில பிள்ளைகளுடைய வழிகளை ஒப்பிட்டுப் பார்ப்பதும் நல்லது.

III. இன்னும் அதிகமாகச் சோதிக்க :

(1) சிலகஷ்டமான கணக்குகளைக் கொடுத்து அவைகளைச் செய்ய எவ்விதமான வழிகளைச் சிறுவர்கள் அனுஷ்டிக்கிருர்கள் என்று ஆசிரியர் நுட்பமாக கவனிக்க வேண்டும்.

(2) குறித்த இடை நேரங்களில் (Short intervals) ஒருதரம் செய்த கணக்கைத் திருப்பச் செய்யும்படி தூண்டவேண்டும்.

(3) சில யுக்திக்கணக்குகளை சுயமாகக் கற்பனைசெய்து எழுதுமாறு ஆசிரியர் பிள்ளைகளுக்கு ஊக்கமும் பயிற்சியும் ஊட்டவேண்டும்.

பூகோளம்.

கணிதத்திற்கு அடுத்தபடியில்,. மணிதவாழ்க்கைக்கு மிகவும் உபயோகமானதும் அறிவை யூட்டுவதுமான பூமி சாஸ்திரப் பயிற்சியைக் குறிக்கலாம் நிகழ்கால இயற்கைச் சம்பவங்களைக் கோண்டும், இயற்கை அமைப்புத் தன்மையைக் கோண்டும், எதிர்கால|சம்பவங்களையும், மனிதனுடைய குணம் தொழில் முதலியவற்றையும் காரண காரிய சம்தந்தமாகச் சேர்த்துத் சிந்தனைக்குரிய நினைப்புக்களைப் பெருக்கலாம். சிறுவர்களுக்கு எப்போதும் ஒற்றுமை, வேற்றுமை அண்மை முதலியவற்றைப் பிரத்தியக்ஷமாக அறிவதில் ஆவல் மிகுதி உள்ளவர்களாகையால், பூமிசாஸ்திர பாடகாலத்தில் ஆசிரியர் மேற்கூறிய முறைப்பிரகாரம் சொல்வது அவர்களுடைய ஞாபகசக்தியை அதிகரிக்கும். வேறும் பட்டணங்கள் ஆறுகள், கலைகள், விளைபொருட்கள், தாவரசங்கமராசிகள் முதலியவற்றைச் சொல்வதற்குப் பதிலாக, ஒவ்வோரு நாட்டின் சிறுவர்களுடைய வாழ்க்கையும், அவர்களைப்பற்றிய விசேஷங்களையும் சோல்வதனுல், பிள்ளைகள் எளிதில் தங்கள் அனுபவங்களையும், அயல்நாட்டுச் சிறுவா அனுபவங்களையும், ஒத்திட்டு அறிவாக்கிக் கோள்வார்கள். இது உண்மையான மனோவிருத்தியையும் ஞாபகசக்தியையும் பெருக்கும்.

ஆசிரியர் பிரதானமாகச் செய்யவேண்டியது முதன் முதல் ஒரு பிள்ளை வசிக்கும் சுற்றுப்புறத்தை ஆராய்ந்து அறிந்து பின்பு அது கண்டவற்றைக் கூறும்படி செய்யவேண்டும். நாட்டுப் படங்களையும் "பிளான்" களையும் எழுதி முக்கியமான இடங்களையும் ஆறு, மலை, முதலியவைகளையும் குறிக்கும்படிச் செய்யவேண்டும். மனப்பாடம் செய்வதைக் காட்டிலும் ஒரு சிறுவன், சிரத்தையோடு, கற்கவேண்டியவைகளைப் படத்தில் குறித்தால் அவை ஒருபோதும் மனத்தைவிட்டு அகலா. இதற்கு ஆசிரியர்களே முன்மாதிரியாக இருக்கவேண்டும். ஆசிரியர்கள் போதிக்கும்போது, தகுந்த படங்களைக் கொண்டும், அல்லது படச் சேர்ப்புப்பெட்டி (Album) களின் உதவியாலும் பிள்ளைகள் காணுதவைகளைக் காட்டி, அவர்கள் மனத்தில் அக்கரையை உண்டாக்கிப் போதிப்பது சிறந்த முறையாகும். பிள்ளைகளையே சிற்சில படங்களையும், விநோத பொருட்களையும், சேகரிக்கக் தூண்டுவது நல்லது. விசேஷ இயற்கைக் சம்பவங்களாகிய பூகம்பம், எரிமலை வெடித்தல், காற்றின் சலனம், புயல்காற்று, முதலியவைகளை நன்றுக விளக்க, நக்ஷத்திரசாலை (Observatory)-க்கு சிறுவர்களை அழைத்துப்போய் காட்டுவது மிகவும் சிறந்தது; அல்லது கல்வி சம்பந்தமான "சினிமா" படங்களையும் காட்ட

லாம்; புயல்காற்று அடிக்கும்போது அதைக்குறித்து வகுப்பிலே பேசுவதும் விசேஷம்; பொதுவாகப் பூமி சாஸ்திர பாடத்தை இயற்கைப் பாடமாகச் சிறுவர்களுக்குப் போதிக்கவேண்டும்' களிமண், காகித பல்ப் (Pulp) முதலியவற்றால், ஒரு நாட்டின், " இயற்கை அமைப்பு " (Relief) செய்து பள்ளிக்கூடத்தில் வைத்தல், பிள்ளைகளின் ஊக்கத்தைப் பெருக்கி, பூகோளம் கற்பதில் விருப்பம் ஏற்படசெய்யும் இன்னும் இவைபோன்ற பல உற்சாகப் பொருட்களைக் கொண்டு ஆசிரியர்கள் பிள்ளைகளின் ஞாபகத்தை நல்லமுறையில் விருத்தியாக்கலாம். இனி செய்யுளைப்பற்றி பார்ப்போம்.

செய்யுள்.

செய்யுள் ஒப்பித்தலானது ஞாபகசக்தி விருத்தியாக்குவதற்கு ஓர் சிறந்தவழி யாதலால், இதை ஆசிரியர்கள் வெகு சிரத்தையோடு கவனிக்கவேண்டும். மனப்பாடம் பண்ணுவதற்குச் சுலபமான சாதகங்கள் எவை தேவைபோ அவை தமிழ்ச்செய்யுட்களில் நிரம்பி இருக்கின்றன. அந்தாதி, சிலேடைவெண்பா மாலை, கலம்பகம், கோவை, மடல், பரணி, என்பவற்றில் காணும், சொற்களும், சொற்றொடர்களும், அழகிய பொருளோடு, செவிக்கினிமை தரும்வண்ணம் அமைந்துள்ளன. ஆகையால் இப்படிப்பட்ட செய்யுட்களை மன்பாடம் செய்விப்பதற்குமுன், அவற்றைக் கரும்பலகையில் எழுதிப் படித்துக் காட்டவேண்டும். செய்யுளைப் பார்த்தும், படிக்கக்கேட்டும், பொருட்களை உணர்ந்தும் மனப்பாடம் செய்வதால் அது நீடித்து ஞாபகத்தில் இருக்கும். மேலும் சிற்சில செய்யுட்கள் வெகு அழகாய்ச் " சொல்சித்திரமாகவும் " (Word Painting) சொல் படம் போலும் " (Word Pictures) அமைந்துள்ளன. நளவெண்பா போன்ற செய்யுட்களை போதிக்கும்போது, இயற்கை வர்ணனையையும், " சொல்சித்திரங்களையும் " கற்பனையால் நினைக்கும்படி செய்தும், இவைகளை உண்மைப்பொருள் உருவங்களோடு அழகாக நினைப்புக்கூட்டி இணைத்தும், இன்னிசை ஓசைகளையும், சொற்களையும், பொருள்பட உச்சரித்தும் போதிப்பது சிறந்ததாகும். சிறுவர்கள் மனப்பாடம் செய்வதற்கு வேண்டிய உற்சாகம், அக்கரை, விருப்பம். முதலியவைகள் உணர்ச்சிச் சுவை நிறைந்த பாக்களில் மலிந்து இருப்பதால் அவைகளை மனப்பாடம் செய்விப்பது விசேஷமாகும். இயற்கைப்பொருள் நயங்களும், சுலபமான அனுபவங்களும், இனிய சொல் ஓசைகளும் நிரம்பி இருக்கின்ற ஔவையாரின் வாக்குண்டாம், நல்வழி முதலிய செய்யுட்களைச் சிறுவர்கள் எளிதில் உணர்ந்து அறிந்து, அனுபவித்து ஞாபகத்தில் வைத்துக் கொள்வார்களாகையால், இவைகளை ஆரம்பத்தில் கற்பிப்பது விசேஷ நன்மையைத் தரக்கூடும். மேலும் குமரகுருபரஸ்வாமிகள், சிவப்பிர்காச சுவாமிகள். முதலியோர், சிறுவர்களுடைய மனத்தைக் கவர்ந்து ஞாபகத்தில் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் பொருட்டு தாங்

கள் இயற்றிய செய்யுட்களில், விசேஷ உபமானங்களையும், நீதிநெறிகளையும் அழகான சொற்களையும் வைத்துக்கவிபாடியுள்ளார்கள். சிறுவர்களுடைய அனுபவத்தையொட்டி நீதிபுகட்டுமோறு மேன்மையாக இயற்றப் பெற்ற ஔவையாருடைய செய்யுளில் கிராமச் சுற்றுப்புறம், ஆறு, கோயில், குளம், குட்டை, அக்குட்டை குளங்களில் இருக்கும் தாமரை, அல்லி, ஆம்பல் முதலிய புஷ்பங்கள், அங்குவந்து கூடும், கொக்கு, நீர்ப்பறவைகள், நெய்தல், கொட்டி, நெற்பயிர், ஏற்றம், உழவர், மரம்பழக்கும்போது வரும் வௌவால், மடல்பெரிய தாழை, மகிழம்பூ, நீர்ப்பாம்பு, வெப்பமரம், காகம், காண்பது சிந்தைக்கும் செவிக்கும், கண்களுக்கும் எவ்வளவு அழகு. இத்தகைய பெரியோர்களுடைய செய்யுட்களை *அவசியமாக மனப்பாடம் செய்யவேண்டும்.*

இலக்கணம்

கல்விகற்கும் மாணவர்களுக்கு முதன் முதல் இலக்கணப் பயிற்சியை விசேஷமாய் பண்டைக்காலத்து ஆசிரியர்கள் கொடுத்து வந்ததின் நோக்கம், ஞாபக சக்தியை விருத்தியாக்குவதற்கேயாகும் தற்போதும் இக்கொள்கை அநேக ஆசிரியர்களிடம் இருந்து வருகிறது. இலக்கணப் பயிற்சியினால், *பொருள் தெளிவு, சொல் திட்டம்,* உதா*ரணங்கொண்டு* விளக்கும் திறமை, நுண்மை ஆராய்ச்சி, முதலிய விசேஷ மனப்பயிற்சிகள், விருத்தியாகின்றன என்று இவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். *இலக்கணப் பயிற்சியினால் ஞாபகசக்தி ஒருவாறு விருத்தியாகின்றதே யாயினும், கற்பனை சக்திக்கு இது அவ்வளவு உபயோகமல்ல. எப்போதும் எல்லாப்போதனை முறைகளும்* யோசிக்கும் சக்தியையும், ஒன்றைச் சிருஷ்டிக்கும் சக்தியையும் (creative power) ஆராய்ந்து அறிந்த அனுபத்தை வேண்டியபோது உபயோகிக்கும் சக்தியையும், (Power of Application) விருத்தியாக்க வேண்டுமோகையால் இலக்கணப் பயிற்சியை ஒரு முடிவாக வைத்துக்கொள்ளாமல் (Ends) மார்க்கமாக *வைத்துக்கொள்வது* (Means) நலமாகும். *ஏனென்றால் இலக்கணம் இலக்கியத்தை ஒட்டியுள்ளது: இலக்கியம் தெரியாமல் இலக்கணம் அறிவது, வெறுப்புக்கு இடமாகும்.* [*தொடரும்*]

சந்தாதார்களுக்கு அறிவிப்பு

பாலர் கல்வியின் சந்தா தொகை முன் பணமாகவே அனுப்பிவிட வேண்டும் என்பதை நமது சந்தாதார்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆகையால், சந்தாதார்களை தமது சந்தா காலம் முடிவடைந்த உடனே, வருஷ சந்தாவை அனுப்பிவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். **ப - ர்.**

கல்வி ஒலி பரப்பு

V. R. சுப்ரமணியன்,
(காரியதரிசி, உபாத்திமைச் சங்கம், உமர் ஆபாத்)

" பாலர் கல்வி பயனுற ஓங்கும்
ஒலியின் வேகம் ஒளியில் காண்க "—என்பது ஒரு புதுமொழி.

இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் மக்கள் அடைந்த களிப்பிற்குக் காரணமாவனவற்றுள் ஒலி பரப்புக் கருவி முதலாகும். இதன் பலன் வெகுவாக தற்காலத்தில் அறியப்பட்டுள்ளது. மேனுடுகளிலும் ஐக்கிய மாகாணம் போன்ற செல்வம் மிகுந்த தேசங்களிலும், வைத்திய சாலைகளில் நோயாளிகளின் நோயைப் போக்க 'ரேடியோ' அமைத்துள்ளனர். நமது நாட்டில் சிறைச்சாலைகளிலும், அனேக கிராமங்களிலும் வானொலிக் கருவிகள் அமைக்கப்பட்டிருப்பது அனைவரும் அறிந்ததே மோட்டாரில் செல்லும் பிரயாணியும் அவ்வின்னேசையைக் கேட்க வசதிகள் அமைந்துள்ளன வெனின் காலச் சக்கரம் சுழலும் வேகம்தான் என்னே! கல்வித் துறையிலும் இக்கருவி அரிய சேவை செய்யப் பெற்றிருப்பது ஓர் பாக்கியமேயாகும். இந்திய ஒலி பரப்பு நிலையங்களிலிருந்து கலாசாலை, உயர்தர பாடசாலை, ஆரம்ப பாடசாலை இவைகள் பயன்பட இயல் இசை நாடகம் பொருந்திய நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. ஆதலால் இச்சந்தர்ப்பத்தை கிராமப் பாடசாலைகள் கைவிடுதல் நன்றே!

இதன் நன்மைகளை ஆராயப்புகின் அவை பலவாகும். பாடசாலையின் பெருமையும் ஆசிரியர்களின் மதிப்பும் முக்கியமாக கிராமங்களில் உயரும், ஆரம்பக் கல்வியில் பெற்றோரும் பிள்ளைகளும் உற்சாகமடைவர். பிள்ளைகள் சரிவரப் பாடசாலை வருவதற்கும், ஊக்கத்துடன் கற்பதற்கும், ஆசிரியர் பெற்றோர் உதவியைப் பெறுவதற்கும் வழிகள் ஏற்படும். நாட்டு நகர பாடசாலைகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு ஏககாலத்தில் ஒரேவிதமாக கல்விப் பெருக்கை அவர்கள் மனத்தில் பாயச் செய்வதால் கிராமக் கல்வி நகரக் கல்விகளுக்குள்ள வித்தியாச மனப்பான்மை ஒழிக்க முடியுமல்லவா? அரசாங்கத்தாரின் ஆரம்பப் பாடசாலை புதிய பாட திட்டத்தைப் பெரும்பாலும் ஒட்டி பல நிகழ்ச்சிகள் வானொலி நிலையங்களில் நடைபெறுகின்றன. உதாரணமாக சங்கீதம், முதலுதவி, தேச பரிபாலனம், சரித்திரம், பூகோளம், விஞ்ஞானம் ஆகியவைகளில் பல பாடங்களும், கும்மி கோலாட்டம், நடனம் ஆகிய பலவும் நிகழ்கின்றன. இன்னும் பல வாத்தியங்களின் இன்னெலி

அந்நிய தேசத்தாரின் வாழ்க்கை, பழக்க வழக்கங்கள், அவர்களின் பாஷைகள் முதலியன அறியக் கூடும். நம் நாட்டில் நடைபெறும் விழாக்களின் தத்துவங்கள், பண்டிகைகள் செய்வதின் நோக்கம் ஆகிய வைகளை ஜாதி மதங்களுக்கேற்ப அறியக்கூடும். நமது ஆசிரியத்தலைவர் ஸ்ரீமான் S. K. எக்ய நாராயணய்யர் போன்ற பெரியார்களின் சொற் சுவை பொருட் சுவையான பொன் மொழிகளைக் கேட்டு மகிழவும் கூடும்.

தீவிரமாக ஆராயுமிடத்து கல்வி அதிகாரிகளும் ஏன் சில விதி களை ஏற்படுத்தலாகாது எனத் தோன்றுகிறது. தற்போது பாடசாலைக் கட்டிடங்களுக்கும் சாமான் வகைராக்களுக்கும் வழங்கிவந்த திரவிய சகாயத் தொகையை நிறுத்திவிட்டார்கள். அதற்குப் பதிலாக இக் காரியத்தின் அவசியத்தையும் பலனையும் கருதியாவது, ஒவ்வொரு பாட சாலையிலும் ரேடியோ கருவி அமைக்க வேண்டுமென்றும் அதற்காக திரவிய சகாயம் அரசாங்கத்தார் செய்வாரென்றும். பிள்ளைகளை அரை மணிக்குக் குறையாமல் பாடசாலை நேரத்தில் ரேடியோ கேட்கச் செய்ய வேண்டுமென்றும் அறிவிப்பது அசாத்தியமான காரியமா?

இத்தகைய செயல்களால் உபாத்தியாயர்களுக்கும், கிராமத் தாருக்கும், பிள்ளைகளுக்கும் ஏற்படும் சந்தோஷத்திற்கு அளவும் உண்டோ! ஆகாச ஒலி அறிவின் களியல்லவா!

இக்கருவி முதியோர் கல்விக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஊட்டும் என்பது துணிபு. விரைவில் அறியாமையைப் போக்கவல்லது என்பதில் ஐயமுண்டோ? முதியோர் கற்கும் இராப் பாடசாலைகளுக்குப் புத்துயிர் அளிக்காதோ?

இவ்வித முயற்சிகளால் ஆசிரியர்களின் வேலைகளும் பொறுப்பு களும் அதிகரிக்குமெனினும் அவைகளை களிப்புடன் ஏற்க முன் வருவர் என்பது திண்ணம். குறிப்பிட்ட விஷயங்களில் சர்க்கார் சற்று செவி சாய்த்தால் பெருங் குறைகள் பல பறந்து பாராத பெரும் பலன்களை யளிக்குமென்பது என் பரிபூரண நம்பிக்கை.

எவ்வாறாயினும் கிராமக் கல்வியில் ஈடுபட்ட நாம், பெற்றோர், பிரமுகர், தனவந்தர் சகாயங்களைக் கொண்டு ஓர் ரேடியோ கருவியைத் தத்தம் பாடசாலைகளில் அமைத்து நாட்டு மக்களின் கல்வி விளக்கைத் தூண்டி பிரகாசிக்கச் செய்வது காலத்திற்கேற்ற அரிய காரியம் என் பது மிகையாகாது.

வானொலிக் கல்வி வானோர்க் கல்வி
இன்பமுடன் கேட்கின் இன்னல் ஒழியும்;
வாழ்நாள் நோக்கின் வீணிற் போகும்
இயல்வது காண்பீர் இசையுடன் இன்புற.

கடல் வாழ் உயிர்கள்*

நீங்கள் பவழம், சங்கு, சோழி, இவைகளைப் பார்த்திருப்பீர்கள், அவை எங்கிருந்து கிடைக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்களா? சாதாரணமாக சிறிய சங்குகளை ஆற்றங் கரைகளில் கண்டிருப்பீர்கள். ஆனால் பெரிய சங்குகள், முத்து, பவழம், இவையெல்லாம் கடலிற் பிறந்தவை.

கடல் மிக்க வளப்பமுடையது. மிக விசாலமானது. நாம் வசிக்கும் பாகம், பூமியின் மேல்பரப்பில் கால்பங்குதான். மீதியுள்ள முக்கால்பங்கு கடற்பிரதேசம். அதனுடைய ஆழமோ சிலவிடங்களில் ஐந்து மைலுக்கு மேற்பட்டது. அதன் மிக விசாலமான பரப்பும், விரிவும், மனிதனுக்கு வியப்பையும், திகைப்பையும் உண்டாக்குகிறது. கடலின்மேல் உலாவிப் பார்த்தால் அதன் ஓயாத அலைகளும், நீரோட்டங்களும், புயல்களும், தென்னல்களும், பவழப் பாறைகளும், கடற்கண் தீவுகளும், வானத்தையளாவும் நீர் தூண்களும், மிதக்கும் பனிமலைகளும் பார்க்கப் பார்க்க மிக்க பரவசத்தை உண்டாக்கும்.

ஆனால் அதன் பரப்பின்கீழ் நோக்கின் இன்னும் பல்லாயிர மடங்கு அதிக ஆச்சரியமும், அச்சமும், திகைப்பும் கொடுக்கக்கூடிய பெரிய உலகம் இருக்கிறது. இன்னும் மனிதனால் காணப்படாத கண்டங்கள் எவ்வளவோ கடலின்கீழ் உள. நம்முள் யாரையாவது உனக்குக் கடலைப்பற்றி என்ன தெரியும் என்று கேட்டால், சட்டென்று அதிக ஆழமுள்ளது; பயங்கரமான அலைகளை யுடையது; உயிரைக் கொள்ளும் முதலை போன்ற கொடிய ஜந்துக்களை உடையது என்று சொல்லுவோம். பூமியின்மேல் எவ்வாறு வகைவகையான தாவர வகைகளும வித விதமான உயிர்வகைகளும், திகழ்கின்றனவோ அதைக் காட்டிலும் பலமடங்காக கடலின் கீழும் தாவரவகைகளும் உயிர்வகைகளும் கொழித்துக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கடலிலும் தனித்தனி உயிர்வகைகள். ஒவ்வொரு ஆழத்திலும் வெவ்வேறு உயிர்ப்பிராணிகள்.

உணவு இன்றேல் உயிரில்லை என்று எண்ணலாம். ஆனால் கடலின்றேல் நாம் உயிர்வாழ முடியாது. உலகிலுள்ள 200 கோடி மக்களில் வெகு சொற்ப மக்களைத் தவிர மீதி யுள்ளவர்களுக்கு மீன் முக்கிய உணவாகும். தேசங்களுக்குக் கடல்மூலம் வருமானம் எவ்வளவோ கோடிக் கணக்காகும். இத்துறையில் முன்னேற்றமடையாத நம் இந்தியாவிலிருந்து கூட 10 கோடி ரூபாய் பெறுமானமுள்ள மீன் ஏற்றுமதியாகிறது. சென்னைக்குச் சென்றவர்கள் அங்கு கடற்கரையிலுள்ள மீன் காட்சிசாலை

---

* With the kind permission of A. I. R., Trichy.

யைப் பார்த்துவிட்டு என்னே காட்சி என்று கூறுகிறார்கள். பெரிய கடலெங்கே? இந்த சிறிய மீன்காட்சிசாலை எங்கே? இதுவே நமக்கு வியப்பாயிருக்கிறது. பரந்த இயற்கைக் கடலினுள் எவ்வாறிருக்குமென்பதை நீங்களே ஊகித்துக்கொள்ளுங்கள். பூமியில் எவ்வாறு சூக்ஷ்ம தரிசினி கொண்டு பார்க்கவேண்டிய நுண்ணிய பேதகர் முதற்கொண்டு யானைவரையில் வெவ்வேறு வகையான பிராணிகள் ஊர்ந்தும், தத்தியும், நடந்தும், தாண்டியும், பறந்துச் சஞ்சரிக்கின்றனவோ, அதைப்போலவே கடலிலும் சஞ்சரிக்கின்றன. அங்கும் விதவிதமான மீன் வகைகளும், கடல் நாய், பசு, குதிரை, யானை போன்றவைகளும், இன்னும இராக்ஷசர் போன்ற நினைக்கமுடியாத பெரிய விசித்திரமான பிராணிகளும் வாழுகின்றன.

மனிதனை எடுததுக்கொள்வோம். அவன் தன் வளர்ச்சிக்கும், தன் இனத்தின் வளர்ச்சிக்கும் என்னென்ன பாடுகள் படுகிறானென்பதை நாம் ஒருவாறு அறிவோம். பூமியின் மேலுள்ள மற்ற பிராணிகளும் தங்கள் வளர்ச்சிக்கும், சஞ்சாரத்திற்கும், விரோதிகளிடமிருந்து தப்பிக்கவும், சீதோஷ்ண மாறுபாடுகளினால் பாதிக்கப்படாமலிருக்கவும் எவ்வளவோ வகை இயற்கைச் சாதனங்களைப் பெற்றிருக்கின்றன. கடலின் கீழும் அவ்வாறே. அங்கு சிறிது சுற்றிப் பார்ப்போம்.

கடலிலுள்ளவைகளை தாவர இனம், தாழ்ந்த பிராணி இனம், மீன் இனம், உயர்ந்த பிராணி இனம் எனப் பிரிக்கலாம்.

தாவர இனத்தில் கடற்பூண்டுகள் விசித்திரமானவை. பஸிபிக், அட்லாண்டிக் மகா சமுத்திரங்களிய் இவை கூட்டமாக மிதக்கும் தீவு போல் இருக்ன்றன. இவை இயற்கைத் துறைமுகங்களை உண்டாக்குகின்றன. கடற்கரை அலையினால் மோதுண்டு கெடாமல் காக்கின்றன. கோடிக்கணக்கான சிறிய கடற் பிராணிகளிக்கு ஆகாரமாகின்றன. இதில் சிலவைகளை மாந்தரும் உண்கின்றனர். இவற்றில் ஒருவகையான என்ற கடற் புஷ்பங்கள் கடற்கீழ் தரை மட்டத்தில் நேர்த்தியான அமைப்போடும், அழகான உருவங்களோடும் பல்வேறு நிறங்களோடும் வளர்கின்றன. அவை தண்ணீருக்குள் வளருவதே நமக்கு ஆச்சரியமல்லவா? அதிலும், இம்மாதிரி வனபபோடு இருத்தல் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்.

கடலிற்குள் இருக்கும் பொருள்கள் என்ன நிறத்தோடு கூடியவை என்று கேட்டால் ஒருவேளை நீலமோ அல்லது சாம்பல் நிறமோ ஞாபகத்திற்கு வரலாம். கண்ணைக்கவரும் மிகுந்த அழகோடு கூடின பொருள்களும், பிராணிகளும் கடலினுள் உள்ளன. பவழத்தைப் பாருங்கள். என்ன அழகான சிவப்பு, சங்கையும் முத்தையும் பாருங்கள். என்ன வெண்மை. அந்த நிறங்களுக்கே உவமை இப்பொருள்களாகும்.

பவழச் செவ்வாய், முத்து அல்லது சங்கம் போன்ற பற்கள் ....நம் காதுகளில் எப்பொழுதும் ஒலிக்கவில்லையா ?

எவ்வாறு நமது காடுகளும், தோட்டங்களும் வெவ்வேறு வகையான பிராணிகட்கு உண்ண உணவும், இருக்க இடமும் கொடுக்கின்றனவோ அதேபோல எண்ணிறந்த கடற் பிராணிகள் அங்குள்ள புதர்களில் உறைகின்றன. அநாதி காலந்தொட்டு வாழையடி வாழையாய் வந்த உயிர்வகைகளின் சந்ததியார்கள் இப்பொழுது இருக்கிறார்கள்.

இந்தக் கடற்பூண்டிலிருந்து கடற்கிருமிகள் விருத்தியாகின்றன. அவைகளில் ஒருவகை பவழப் பூச்சிகள். இவை வேடிக்கையானவை. இவை தாவரங்களுக்கும் பிராணிகட்கும் இடையிலுள்ளவை. முட்டைகளில் இருந்து உண்டாகி, கடற்பூண்டுகளில் பற்றி, கூட்டமாக வாழ்ந்து பல்லாண்டுகளாகக் கூடு கட்டி நேர்த்தியான பவழப் பாறைகளையும், தீவுகளையும் உண்டாக்குகின்றன. இவை பஸிபிக், மத்திய தரைக்கடல்களில் காணப்படுகின்றன. இங்கிலாந்திலுள்ள சாக் பாறைகளும் குன்றுகளும் இவ்வாறானவையே.

இப்பூச்சுகள் வளர்ச்சியடைய, ஓடுகளோடு கூடின, நண்டு, நத்தை, கிளிஞ்சல், சங்கு, ஆமைகள் போன்ற பிராணிகள் தோன்றுகின்றன. இந்த நத்தை இனத்தில் சேர்ந்தவைதான் முத்துச் சிப்பிகள். அவைகளில் தனி வரலாறே மிக அருமையானது.

நண்டு இனங்களில் அநேகவகை, சிறியனவாயும் பெரியனவாயும் காணப்படுகின்றன. இவ்வினங்களில் ரணச்சிகிச்சை செய்வதற்கு ஏற்றவாரான....வெட்டவும், கத்திரிக்கவும், குத்தவும், பிடிக்கவும்.... அவையவங்கள் கண்ணுக்குத் தெரியாதவாறு அமைந்திருக்கின்றன. என்ன விநோதம்.

கடலுள் தரை மட்டத்தின்மேல் கடற்பஞ்சு போன்ற (**Venus flowers basket**) "வெள்ளி பூக்கூடை" என்னும் ஒரு வகைப்பிராணி வசிக்கின்றது. கடல்வாழ் பிராணிகளில் மிக்க அழகு நிறைந்தவற்றில் இது ஒன்று. அவ்வளவு ஆழத்திலிருப்பதால் அதிக அமுக்கும் சக்தியின் காரணமாக இவ்வளவு அழகான உருவம் ஏற்படுகிறதென்று அறிஞர் ஊகிக்கிறார்கள்.

Portuguese Man of War என்ற பிராணி மிகப் பெரிய உருவமுடையது. கண்ணைக் கவரும் வர்ணங்களோடு கூடியது. ஆனால் இதன் பெரும்பாகம் வெகு நீண்ட தோகை போன்ற வாலாகும். இதைக் கடல் மயில் என்னலாம். ஆனால் கடுமையாகக் கொட்டும் சக்தியுடையது.

கடல் பரப்பை அடுத்தாற்போல இறக்கை போன்ற செதில்களோடு ஓரினம் வாழ்கின்றது. இது திமிங்கலம் போன்ற கடற் பிராணிகளுக்கு இரையாகும்.

கூடாரம்போன்ற ஓடுகளோடும் கூடின இனங்கள், பாறை போன்றவற்றை உடம்புபோல் பற்றிக்கொள்ளும் தன்மையன. இவை களில் 100 வகைகளுக்குமேல் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் சிலவற்றிற்கு வரிசைக்கு 12 ஆக 160 வரிசைப் பற்கள் உள்ளன. மனித னுக்கும், சில பறவைகட்கும் இவை உணவாகின்றன.

இவற்றுள் தலையைச் சுற்றி கால்களுள்ள கைகளென்றும் வைத் துக்கொள்ளலாம். ஓரினம் இருக்கிறது. இதை ஆங்கிலத்தில் "Cuttle-fish", "Squid", 'Octopus" என்கிறார்கள். இதில் 50 வகைகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இது குடம்போன்ற சரீரமும், 10 கைகளும், இரண்டு கொட்டாத கண்களும் பெற்றுள்ளது. இதனுடைய ஞானேந் திரியங்கள் அபூர்வமானது. சலனமோ மிகவும் விநோதம். நொடிப் பொழுதில், நீந்தவும், முழுகவும் மிதக்கவும் ஏற்றவாறு அபூர்வ வசதி களைப் பெற்றுளது. உணர்ச்சி இந்திரியம் மிக்க உயர்வுள்ளது. பொருள்களையோ, பிராணிகளையோ, தொட்டமாத்திரத்தில் ஒட்டிக் கொள்ளச் செய்து, தன் கரங்களில் சிறைப்படுத்தி, உணவு கொள்ளும் சக்தியுடையது. இதனிடத்தில் அகப்பட்டால் போச்சு உயிர். இதற்கு மூளை உண்டு. இரவில் இரை தேடச் செல்லும். நீந்துபவர்களையும், முத் துக் குளிப்பவர்களையும் பற்றிக் கொன்றுவிடும். விரோதிகளுடன் ஆத் திரத்தோடு சண்டை செய்யும். நன்றாக வளர்ந்த இப்பிராணி அமெரிக் காவின் வடகிழக்குக் கடல்களில் 55 அடி நீளம் உடையனவாய் இருக் கின்றது. உடல் 20 அடி நீளம், கைகள் 35 அடி. சுற்றளவு 12 அடி. ஒட்டுவாய் துவாரம் இரண்டேகால் அங்குலம். 9 அங்குல நீள முள்ள கண்கள். இதைக் கடல் "இராவணன்" எனலாம். மேலும் இது பகைவர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள ஒரு அபூர்வ மாயா சக்தி பெற்றுள்ளது. கபந்தன் என்ற அரக்கன் உருவம் தெரியாமல் தன்னிடம் வந்தவற்றையெல்லாம் விழுங்கினனென்று புராணவாயிலாக அறிகிறோம். மற்ற அரக்கர்கள் வெவ்வேறு உருவமும் நிறமும் கொண்டு திரிந்தார்களென்று கேள்விப்படுகிறோம். ஆனால் இந்தக் (Octopus) 'குட மீனைப்' பார்த்தால் அக்கதையெல்லாம் உண்மையென்றே நம்ப லாம். ஒருவித கருப்பு திரவத்தை வெளியே கக்கி, தானிருக்குமிடமெல் லாம் ஒரே இருட்டாகச் செய்துவிட்டு விரோதிகளிடமிருந்து தப்பி யோடிவிடும் சக்தியுடையது. இந்தக் கருப்பு திரவம் ஸெபியா என்ற ஒருவித பழுப்பு வர்ணம் செய்ய உதவுகிறது. தவிர இது இடத்திற் கேற்ப நிறத்தை மாற்றிக்கொள்ள பல்வேறு வர்ணங்களை தன்னிடத்தே கொண்டுள்ளது. இதனால் பகைவர்களை ஏமாற்றியும், இரையைத் தன் வயப்படுத்தியும் வாழ முடிகின்றது. மீன்களுக்கு வருகிறோம். எத்தனை வித மீன்கள். என்ன உருவம். என்ன நிறம். பச்சை மீன், சிவப்பு மீன், தங்க மீன், மேக நிற வானவில் நிற மீன், பறக்கும் மீன், விசிறி மீன், யானை மீன், தீவெட்டி மீன், அழகான "தேவ மீன்", (Angel

fish) நீரோட்டங்களோடு செல்லும் மீன், வாள் மீன், மீன் பிடிக்கும் மீன், **(Angler fish)**, மாலுமி மீன், **(Pilot fish)**, நாய் மீன், சுரு மீன், குழாய் மீன், சிப்பாய் மீன், மின்சார மீன், முதலியன. நான் ஏதோ எல்லாவகை மீன்களையும் சொல்லிவிட்டேன் என்று எண்ணுதீர்கள். மனிதன் பார்த்தளவில் ஒரு சிறு அம்சத்தைத்தான் சொன்னேன்.

பாருங்கள், ஒருவகை மீன், கூடு கட்டி, பெண் இனத்தோடு இல்லறம் நடத்தி, குடும்பம் வளர்த்து, இல்லாளாகிய பெண் மீன் வீட்டை விட்டு வெளியேற, அந்நியர்கள் வீட்டினுள் நுழையாமல் குஞ்சுகளைக் காப்பாற்றிக் கூட்டை அடைத்து தன் குஞ்சுகளுக்குத் தொட்டிலிட்டு, விரோதிகளிடமிருந்து விலக்கி வளர்க்கும் விந்தையை என்னென்று சொல்லுவது. அவைகளின் ஆயுளைப்பற்றி என்ன எண்ணுகிறீர்கள்? மீனில் சில 25 வருஷங்கள் முதல் 40 வருஷங்கள் வரை வாழ்கின்றன. தங்க மீன், ஆஸ்டிரேலியாவுக்கு அருகிலுள்ள முதலியன இவ்வாறுனவை.

சிறிய மீன் பெரிய மீனுக்கு ஆகாரம் என்பதை நீங்கள் மத்ஸ்ய நியாயம் என்ற வழக்கு மூலம் கேட்டிருப்பீர்கள். நாய் மீன் என்ற ஒரு வகை கொள்ளைக்கார மீன் என்று கூடச் சொல்லலாமென்று நினைக்கிறேன். மற்ற மீன்களைத் துரத்தி, உண்டு, சில சமயங்களில் வலையின் உள்ளும் புகுந்து, அங்குள்ள மீன்களை யெல்லாம் தின்றுவிடுவதுமல்லாமல், உறுதியான வலையையும் கிழித்து, நாசமாக்கிவிடும் தன்மையை யுடையது. தூண்டில் பிடிக்கும் மீன் ஒரு விசித்திரமானது. இது இயற்கையாகவே மிக நீளமுடையது. தவிரவும் இதன் தலையிலிருந்து தன் நீளத்தைப்போல் நான்கு பங்கு நீளத்தையுடைய தூண்டிலையும் பெற்றுள்ளது. அதன் மூலம் சுழற்றி ஏராளமான சிறிய மீன்களை இரை கொள்ளும். கடலின் தரை மட்டத்திற்கு அருகில் உலாவும்.

துப்பாக்கி மீன், மலேயாப் பக்கங்களிலுள்ளது. கடல் தாவரங்களில் உட்காரும் பூச்சிகளின்மேல், தன் உதடுகளினின்றும் குறிப்பாகத் தண்ணீரைப் பீச்சி, அவற்றைக் கீழே விழச்செய்து, விழுங்கி விடும். இது தன் குறியில் தப்புவதே இல்லை. இவ்வாறு இரைதேட விசித்திர வசதி பெற்றுள்ளது.

மின்சார மீன் என்பன ஒரு வகை. இவை அமெரிக்காவின் அருகில் காணப்படுகின்றன. தொடுபவர்களுக்கு அதிர்ச்சி ஏற்படும். நியுயார்க் மீன் காட்சி சாலையிலுள்ள ஒருவகை எலக்ட்ரிக் மீனிலிருந்து ஒரு மின்சார நியான் ட்யூப் விளக்கை ஏற்றுவதற்கான மின்சார சக்தி இருக்கிறதாகக் கண்டிருக்கிறார்கள். இச்சக்தியின் மூலம் தன் இரையைக் கவர்ந்தும், விரோதிகளிடமிருந்து தப்பித்தும் வாழ்வதும் ஆச்சரியமல்லவா?

சுரு மீன்கள் என்பவை ஒருவகை கொடிய கடலரக்கர்கள். இதில் சில 40 அடி முதல் 60 அடி வரை வளருகின்றன. இதற்குப்

பஹாசுர பசி போலும். அளவற்றச் சிறிய மீன்களை வாலினல் அடித்து ஒரே வாயில் விழுங்கிவிடும். இவற்றுள் ஒருவகை சுத்தியல் தலையோடு கூடியது. ஒவ்வொரு பக்கத்திற்கும் ஒரு கண்ணுடையது. பற்கள் 6 அடி நீளமுடையன. இரட்டை வரிசை. கப்பல்களைத் துரத்திச் சண்டையிட்டு, அதில் சில சமயங்களில் துவாரங்களையும் செய்துவிடும். இவ்வாருன கொடிய மீன்களும், சாதுவான மீன்களும் எல்லையற்ற அளவில் வகை வகையாய் அபூர்வ வாழ்க்கையோடு வாழ்கின்றன.

வேறுவகைகளைப் பார்ப்போம். ஸீல், திமிங்கலம் முதலியன இவ்வினத்தைச் சேர்ந்தவை. கடலினங்களுக்குள் உயர்ந்தவை. பருத்த சரீரத்தோடு கூடினவை. திமிங்கலங்களில் அநேக வகைகள் இருக்கின்றன. குளிர்ந்த கடல்களில் இவை அநேகமாக வாழ்கின்றன. நன்ருக வளர்ந்த ஒரு திமிங்கலம் சில சமயங்களில் 100 அடி நீளம் வளரும். இவை குட்டிப்போட்டு பால் கொடுப்பன. ஒரு சாதாரணத் திமிங்கலத்தின் தலையிலிருந்து 80 பீப்பாய்கள் அல்லது 3 டன் கொழுப்பு எண்ணெய் எடுக்கலாம். பற்கள் 8 முதல் 10 அங்குல நீளமுடையன' சில கப்பல்களைத் துரத்திச்சென்று சண்டையிடும் இந்தக் கடல் அரக்கர்களோடு சிறிய ரோமங்களோடு கூடின கடற் கரடிகளும் கடற் சிங்கங்களும் வாழ்கின்றன. இவையெல்லாம் குளிர்ந்த கடல்களில்.

இவற்றைத் தவிர, கடற் பசுக்களும், கடற் குதிரைகளும், நான்கு கண்கள் தோன்றக்கூடிய மீன்களும், கடல் வெள்ளரிக்காய்களும் - உயிருள்ளவை - கடற்போக்கிரிகளும், முள்ளம்பன்றிகளும் குமரி முனைக்கரையில் இவைகளைக் காணலாம். நக்ஷத்திரம் போன்ற மீன்களும், பல உருவங்களோடு கூடின குழ குழ மீன்களும் (Jelly fish) இன்னும் பலவும் சேர்ந்து விளங்குகின்றன. இவைகளின் வாழ்க்கையோ அபூர்வமானது. கொடிய கடற்பாம்புகள் உஷ்ணக் கடல்களில் உள.

கோடையில் மலை வாசங்களுக்கு ஆரோக்கியத்தின் நிமித்தம் மனிதர்கள் செல்லுவது போலவும், பறவைகள் வேறு இடங்களுக்கு வெப்பத்தின் நிமித்தம் செல்வது போலவும், கடல் இனங்களில் சில பருவத்திற்கேற்ப இடம் விட்டு இடம் மாறி சஞ்சரிக்கின்றன.

பண்டை நூல்களில் கடலைப்பற்றிய செய்திகள் பல உள. செல்வ நிலை உயர்ந்துள்ள ஏனைய நாடுகளை நோக்கின், அவையெல்லாம் கடலின் காரணமாகவே என தெள்ளிதில் விளங்கும். அந்நாட்டவர்கள் ஆழியின் கீழ்போய் கருவிகளின் மூலம் அதை ஆராய்ந்து, கடல் வாழ் உயிர்களைப் பற்றிய விவரங்களை அறிந்து, தங்களது அறிவளவும் தங்கள் நாடுகள் கொழிக்கவும் காரியங்களைச் செய்ய,' நாம் மட்டும் வாளாவிருக்கலாமா? கடல்போல் ஆர்வமெழுந்து, நாமும் கடல்களில் உள்ள விஷயங்களை அறிந்து நம் நாடு நலம் பெறவும், நாம் பெருமையை அடையவும் முயற்சியைச் செய்யவேண்டும்.

பாடசாலைத் தோட்டம்

(பிப்ரவரி இதழ் 372-ம் பக்கத் தொடர்ச்சி)

S. ஆறுமுகம்,

(உபாத்தியாயர், கவந்தப்பாடி, பவானி)

இதுவரை தோட்டத்தைப் பண்படுத்தல், எருவிடுதல், எருவின் வகைகள், ஒவ்வொரு வகை எருவின் குணங்கள் முதலியன கவனித்தோம். இனித் தோட்டத்தில் பயிரிடுதலைக் கவனிப்போம். பயிரிடுமுன் விதைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும்,

விதை பொறுக்குதல்

பாடசாலைத் தோட்டத்தில் என்னென்ன பயிரிட வேண்டுமோ அவைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். பாட சம்பந்தமாகவும், விவசாய பாட சம்பந்தமாகவும், தோட்டத்தின் அழகுக்காகவும் என்னென்ன பயிர் செடிகளையும் மரங்களையும் பயிரிட வேண்டுமென்பது முன்பே சொல்லப்பட்டிருக்கிறது. விதைப்பதற்கு வேண்டிய விதைகள் நன்றாய் முதிர்ந்ததாயும், உளுத்துப் போகாததாயும், பலங்குறையாததாயும், நோவற்றதாயும் பொறுக்கி யெடுத்துக்கொள்ள வேண்டும். முந்திய அறுப்புக் காலங்களில் இவ்விதைகளைப் பொறுக்கி யெடுத்துப் பக்குவப்படுத்தி வைத்திருக்கவேண்டும். விதைகளைச் சரிவரப் பொறுக்கி யெடுத்துவரும் பக்ஷத்தில் இப்போது சாகுபடிக்காக விதையின் அளவு எவ்வளவு செலவாகிறதோ அதில் பாதி போதுமானது. நல்ல லாபமும் கிடைக்கும். வருஷா வருஷம் விதைகளைத் தேர்ந்தெடுத்தே பயிராக்கும் பக்ஷத்தில் ஒரு நல்ல வர்க்கத்தை நாம் உண்டாக்கி விடலாம். இனி பொறுக்கி யெடுத்த விதைகளைப் பயிரிடுவதைப் பற்றிக் கவனிப்போம்,

பயிரிடுதல்

தாவரங்கள் உற்பத்தியாகும் விதங்களைப் பலவிதமாகப் பிரிக்கலாம். விதைகளை விதைத்தும், நாற்று நட்டும், கிழங்குகளை நட்டும், பதியம் போட்டும், கிளைகளை வெட்டி நட்டும் பயிர் செய்யலாம். உற்பத்தி செய்யவேண்டியவைகளைத் தயாரித்துக்கொள்ள வேண்டும். இனி ஒவ்வொரு வகைகளையும் அவைகளைப் பயிரிடும் முறையையும் கவனிப்போம்.

1. விதை போட்டுப் பயிர் செய்பவை.
2. நாற்று நட்டுப் பயிர் செய்பவை.
3. பதியம் போடுவது.
4 கிழங்குகள் நட்டுப் பயிர் செய்பவை.
4. வெட்டி நடுதல்.

1. **விதை போட்டுப் பயிர் செய்பவை**:—அவரை, மக்காச் சோளம், ஆமணக்கு, மொச்சை, சோளம், கம்பு, பரங்கி, புடல், பாகல், பீர்க்கன் முதலியன இவ்வகையில் சேரும். இவைகளைப் பயிரிடவேண்டுமானால் விதைகளைச் சேகரித்து வைத்துக்கொள்ளவேண்டும். பண்படுத்தின பாத்திகளில் தண்ணீர் ஒருமுறைவிட்டு அப்பாத்திகளில் நடவேண்டும் இவைகளுக்குச் சுமாரான தண்ணீர் போதும். இதில் படரக்கூடிய கொடிகளுக்கு படரும் பருவத்தில் பந்தல் அமைத்து விடவேண்டும். இவைகளை வருஷம் ஒருமுறை பயிரிடலாம்.

2. (A) **நாற்று நட்டுப் பயிர் செய்யும் பயிர்கள்**.—நாற்று நட்டுப் பயிர் செம்பவைகளில் இருவகையுண்டு. ஒன்று பயிர்கள், மற்றொன்று மரங்கள் இப்போது பயிர்களைக் கவனிப்போம். நெல், கம்பு, ராகி, மிளகாய், கத்தரி முதலியன இவ்வகையில் சேரும். நாற்று விடுவதற்கென்றே தனியிடம் தோட்டம் அமைக்கும்போது பிரித்திருக்கிறோம். அப்பாத்திகளில் இவைகளின் விதைகளைத் தூவிவிடவேண்டும். பின் முளைத்து 6 அங்குல உயரம் வரும்வரை ஈரம் காயாமலிருக்க தண்ணீர் விட்டுக்கொண்டே யிருக்கவேண்டும். தண்ணீரைத் தேங்கவிடக்கூடாது. முளைத்துவந்த நாற்றை தண்ணீர்விட்டுப் பிடுங்கி வேறு பண்படுத்தின பாத்திகளில் தண்ணீர்விட்டு நடவேண்டும். இவைகளை வருஷத்தில் இருமுறை பயிர் செய்யலாம். நெல் ஒன்றுக்குத்தான் தண்ணீர் அதிகம் வேண்டும். மற்றவைகளுக்கு மிதமான தண்ணீர் போதும்.

2. (B) **நாற்று நட்டுப் பயிர் செய்யும் மரங்கள்** :—இவைகள் பல வருஷப் பயிர்கள். இவ்வகையில் தென்னை, பனை, எலுமிச்சை, மாதுளை, மா, கொய்யா முதலியன சேரும். இவைகளுக்கு முளைத்து பயிராகும் வரை வாரம் இருமுறை நீர் விட்டால் போதும். பின் பிடுங்கி வேறு பண்படுத்தின இடத்தில் நடலாம். இவைகளுக்குத் தண்ணீர் அதிகம் தேவையில்லை.

3. **பதியம் போடுவது** :—மல்லிகை, சர்க்கரை வள்ளிக்கொடி, ரோஜா, அரளி, நந்தியாவட்டம், குரோட்டன்ஸ் முதலியன இவ்வகையில் சேரும். இவைகளின் வேர்க்கொடிகள் சம்பாதித்து பண்படுத்தின பாத்திகளில் கொடிகளின் இரு ஓரங்களையும் நிலத்தில் பதியவைத்து பதியம்போட வேண்டும். இவைகளுக்குத் தண்ணீர் அடிக்கடி விட வேண்டும். இவைகள் வருஷம் ஒருமுறை பலன் தரும்

4. **கிழங்கு நட்டுப் பயிர் செய்பவை** :—இஞ்சி, மஞ்சள், உருளைக் கிழங்கு, கல்வாழை, சேனை, முள்ளங்கி முதலியன இவ்வகையில் சேரும். இவைகளின் கிழங்குகள் சம்பாதித்து தோட்டத்தில் பண்படுத்தின பாத்திகளில் நடவேண்டும். இவைகளுக்கு நிலம் காயாமல் தண்ணீர் விடவேண்டும். இவைகளை வருஷம் ஒருமுறை பயிர் செய்யலாம்.

5. **வெட்டி நடுதல்** :—கரும்பு, கிளுவை, பூவரசு, முருங்கை, காட்டாமணக்கு, பாச்சான் முதலியன இவ்வகையில் சேரும். இவை

களின் கிளைகளை வெட்டி நடலாம். கரும்புக்குமட்டும் தண்ணீர் அதிகம் வேண்டும். மற்றவைகள் தழைத்தபின் மாதமிருமுறை தண்ணீர் விடலாம். கரும்பை வருஷம் இருமுறை பயிர் செய்யலாம். மீதியுள்ளவைகள் பல வருஷப் பயிர்கள்.

மேற்சொல்லியவைகளில் ஒவ்வொரு வகைக்கும் சில பயிரிட்டால் போதும். இவைகளைப் பயிரிடுவதைப்பற்றி இன்னும் சில முக்கிய விஷயங்களைக் கவனிப்போம். ஒவ்வொருவகைப் பயிருக்கும் வித்தியாசப்பட்டுள்ள சீதோஷ்ண ஸ்திதி வேண்டும். ஆகையால் வருஷம் பூராவும் என்னென்ன பயிர்களை எந்தெந்தக் காலங்களில் பயிரிடவேண்டுமென்பதைக் கவனிப்போம்.

பயிரிடும் காலம்

வருஷம் பூராவும் உஷ்ணகாலம், மழைகாலம், குளிர்காலம் என்று மூன்று பிரிவாகப் பிரித்து ஒவ்வொரு காலங்களிலும் நாம் செய்ய வேண்டிய வேலைகளைக்கவனிப்போம். கோடை லீவு விட்டு பள்ளிக்கூடம் திறப்பதிலிருந்து தோட்டத்தில் செய்யவேண்டிய வேலைகளைப் பகுத்துக் கொள்ளவேண்டும்.

1. ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் ஆகிய இந்த மாதங்களில் செய்யவேண்டிய வேலைகள். உஷ்ணகாலம் குறைந்திருக்கும். மழைகாலம் ஆரம்பிக்கும். முதலில் பாத்திகளைப் பிரித்தும், எருக்குழிகள் தோண்டியும், பல வருஷப் பயிர்களுக்கு குழிகளும் தோண்டலாம். பந்தல் போட்டுப் பயிர்செய்யும் கொடிகளுக்கு குழிகள் தோண்டலாம். காய் கறிச்செடிகளுக்கு விதைவிதைப்பதும், மல்லிகை, ரோஜா, முதலிய பூஞ்செடிகளையும் நடலாம். ஒரு பருவச்செடிகளுக்கு விதை விதைக்கலாம். கிழங்கு வகைகளை நடலாம். பயிரிட்ட பாத்திகளுக்கு தண்ணீர் விட்டுக் கொண்டிருக்கலாம். நாற்றுவிட்ட பயிர்களைப் பிடுங்கி நடலாம். படரும் கொடிகளுக்கு பந்தல் போடலாம். நட்ட பயிர்களுக்குக் களை கொத்தலாம். களைப்பூண்டுகளை எருக்குழியில் சேர்க்கலாம். வாழை முதலிய கிழங்கு வகைகளை நடலாம்.

2. அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி இம்மாதங்களில் செய்யவேண்டிய வேலைகள். மழைகாலமானதால் நன்செய்ப் பயிர்களை பயிரிடலாம். முன்னால் பயிர்செய்த காய்கறிச் செடிகளில் காய்கள் பறிக்கும் காலம். விதைக்காகப் பழுத்துள்ள காய்வகைகளைப் பத்திரப் படுத்தலாம் பாத்திகளில் மழைத்தண்ணீர் அதிகம் தேங்கியிருக்கும். தண்ணீரை வடிய விடவேண்டும். பழங்களையும், விதைகளையும் காய வைத்துப் பத்திரப்படுத்தலாம். படரும் செடிகளைத் தாக்கும் பூச்சிகளை யழிக்கலாம்.

3. பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே இம்மாதங்களில் செய்ய வேண்டிய வேலைகள். மழை ஓயும் காலம். பயிர்செடிகளைக் களைகொத்தும் காலம், சுரை, அவரை முதலிய காய்கள் சேகரிக்கும் காலம். கத்தரி

புடல், சுரை முதலியன இரண்டாம் தரம் பயிரிடும் காலம். கிழங்குகள், படரும் கொடிகளைப் பிடுங்கி எருக்குழியில் சேர்க்கலாம். பூஞ்செடிகள் பூக்கும் காலம். பூஞ்செடிகளுக்குக் களைகொத்தலாம். காய் கறிச் செடிகளுக்கே நீர்பாய்ச்சலாம். உஷ்ணகாலம் ஆரம்பம் பூக்கள், காய் கறிகள் சேகரம் செய்யலாம். பாத்திகளைக் கொத்திவிடலாம்.

தோட்டவேலை சம்பந்தமான சில குறிப்புக்கள்

வருஷம் பூராவும் பாடசாலைத் தோட்டத்தில் செய்யவேண்டிய வேலைகள் மேலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. தோட்டத்தில் நாம் தினந்தோறும் செய்யும் வேலைகளை டைரி ஒன்றில் குறித்துக்கொள்ள வேண்டும். தோட்ட டைரியில் குறிக்கவேண்டியவைகளைக் கவனிப் போம். தோட்டம் ஏற்படுத்தல், மண்ணைப் பண்படுத்துதல், மண்ணிலுள்ள புழு, செல் இவைகளைக் கவனித்தல். எருப் போடுதல். நிலத்தை உழுதல், பாத்திகள் பிடித்தல், விதைவிதைத் தல், விதைக்குங்காலம் தண்ணீர் பாய்ச்சுதல், முளைகளைக் கவனித் தல், முளைக்கப் பிடிந்த நாட்கள், நாற்று நடுதல், பதியம் போடுதல், பார்வையிடுதல், களை கொத்துதல், காய்கறி பறித்தல், செடிகளின் பாதுகாப்புகளை அநுபவத்தில் கண்டறிதல், ஒவ்வொருவகை பயிர், செடி, மரம், காய் பூஞ்செடி முதலியவைகளைப் பயிரிட்டு அறுவடையா கிப் பிடுங்கியெறியும்வரை தினந்தோறும் நாம் அவைகளுக்குச் செய்யும் வேலைகளையும் குறிக்கலாம். பயிர்ச் செய்பவைகளில் ஏற்படும் மாறுதல் களையுங் குறிக்கலாம்.

மேற்சொல்லியமாதிரி டைரியொன்று போட்டு வேலைகளைக் குறிக் கும்பக்ஷத்தில் விவசாய பாடசம்பந்தமாக நாம் கீழ்க்கண்ட விஷயங்களை யறிந்துகொள்ளலாம். ஒவ்வொருவகைப் பயிர், செடி, மரம், கொடி, கிழங்கு, காய்கறி, பூஞ்செடி முதலியவைகளை இன்னின்னகாலத்தில் பயிரிடலாம், அவைகளுக்கு இவ்வளவு தண்ணீர் எரு தேவையாயிருக் கிறது. அவைகளுக்குக் காலாகாலத்தில் செய்யவேண்டிய வேலைகள், ஏற்படுஞ் செலவு, அடையும் லாபம் முதலியனவாம்.

இனி தோட்டத்தில் செய்யவேண்டிய வேலைகளைக் கவனிப்போம். பயிர்களுக்கு மிதமாய் தண்ணீர் பாய்ச்சவேண்டும். சிறு செடியாயிருக் கும்போது இரண்டுநாளைக் கொருதாம் பாய்ச்சினால் போதும். செடி சற்று வளர்ந்ததும் களையெடுத்துவிடவேண்டும் களை யெடுத்தபின் நான்கு நாளைக்கொருதரம் பாய்ச்சினால் போதும். செடி பூப்பதற்கு முன் ஒருமுறையோ இருமுறையோ பாத்தியைக் கொத்தி மண்ணைக்காய விட்டு காற்றூடச் செய்யவேண்டும். பின் நீர் பாய்ச்ச வேண்டும். செடி பூத்தபின் கொத்திவிடக்கூடாது. அப்படிச் செய்தால் செடியசங்கிப் பூவுதிர்ந்து தக்க பலனளிக்காது.

இன்னும் தோட்டவேலை சம்பந்தமான மற்ற விஷயங்களையும் கவனிப்போம். [தொடரும்]

புலனறிவு

டாக்டர் மாண்டிஸோரி அம்மையார் செய்த பிரசங்கத்தின் சுருக்கம்

குழந்தைகளுக்கு புலனறிவூட்டக்கூடிய கருவிகளைக் கொண்டு போதிப்பது ஒருமுறையாகும். குழந்தையானது தன் எண்ணத்தி லுள்ளதைச் செய்து முடிக்கவேண்டும் என்ற முயற்சியுடையதா யிருக்கிறது. குழந்தை முயற்சியுடையதா யிருக்கவேண்டும். அந்த முயற்சி அது தனியா யிருந்துகொண்டு செய்யவேண்டும். அதாவது அதன் உள் ஏற்படும் ஆதிக்யத்திற்குத் தகுந்தபடி அது நடந்துகொள்ளவேண்டும். வெளியிலிருந்து ஒருவரால் ஏவப்பட்டதைச் செய்வதுபோலாகாது. அதன் அந்தரங்கம் எவ்வளவு சுறு சுறுப்பாக இருக்கிறதோ அவ்வளவு வெளிப்புற கோட்பாடுகளுக்கு அடங்கி நடக்காது. அதாவது அது தன் வேலையைத்தானே செய்துகொள்ள வேண்டும். குழந்தையின் சுபாவம் என்னவென்றால் சுறு சுறுப்பா யிருப்பதும், சுற்றியுள்ளவைகளை மனதில் பதியவைத்துக் கொள்ளுவதும். குழந்தையானது பிறரால் ஒத்தாசை செய்யப்பட இஷ்டப்படுவதில்லை. அதனால் பெரியவர்கள் அதற்கு ஒத்தாசை செய்யப்போனால் அது சச்சரவு செய்கிறது. ஏனென்றால் அது விஷயங்களைத் தானாகவே செய்து கற்றுக்கொள்ள முடியும். இந்த முக்கியமான விஷயத்தை எல்லாரும் தெரிந்துகொண் டிருந்தும் பெரியவர்கள் குழந்தைக்கு வேண்டியவற்றை செய்துகொடுக்க முயலுவது ஆச்சரியத்தை விளைக்கிறது. குழந்தையானது வேலைகளைத் தானே செய்ய முடியாது, ஏனென்றால் அது அவைகளை சரிவர செய்து முடிக்கும் குணங்களை அடையவில்லை. பெரியவர்களும் அதற்கு உதவிசெய்யக் கூடாது. இங்குதான் உபாத்தியாயருடைய சாமர்த்தியம் இருக்கிறது. அவர் அதற்கு எவ்வளவு உதவிவேணுமோ அவ்வளவுக்குமேல் படாமல் உதவிசெய்யவெண்டும். அதற்கும் ஓர் அளவு இருக்கவேண்டும். ஆகையால் இதுவிஷயத்தில் ஆராய்ச்சி அவசியமா யிருக்கிறது.

புலன் அறிவு, பொம்மைகள்.

வைத்தியர்களும் சரீரசாஸ்திரிகளும் குழந்தையானது சில குறிப்பிட்ட காலங்களில்மட்டும் தன்னைச் சுற்றியுள்ள உருவங்களைப் பற்றி கிரஹித்துக்கொள்ளுகிறதென்றும் இதரகாலங்களில் இல்லையென்றும் கண்டறிந் திருக்கிறார்கள். அந்த உருவங்களைப்பற்றி புலன்கள் மூலம் மட்டும் கிரஹிக்கவில்லை, மனதுக்கும் செலுத்துகிறது. அதாவது தன்னைச் சுற்றியுள்ளவைகளின் பிரதி பிம்பத்தை கிரஹித்துக்கொண்டு தன் மனதில் அவைகளை ஸ்தாபித்துக்கொள்ளுகிறது. இந்தப்பிரகாரம் பெரியவர்களால் குழந்தையின் மனதில் ஸதாபிக்கமுடியுமா. முடியவே முடியாது. அதனால்தான் மனோசாஸ்திரக்காரர்கள் ஐந்துவயதுக்கு முந்தி குழந்தைகள் சாதாரண பள்ளிக்கூடங்களுக்கும் போகக்கூடாது என்று நிர்ணயித்திருக்கிறார்கள். ஒருவராலும் கற்றுக்கொடுக்கப்படாமல்

குழந்தையானது அனேக வஸ்துக்களைப்பற்றி எப்படி மனதில் குறித்துக்கொள்ளுகிறது என்பதை நாம் பார்த்தோமானால், குழந்தைக்கு வஸ்துக்களை எடுப்பதற்கும் அவைகளை சீர்படுத்துவதற்கும் உள்ள வெகுவான சக்தி இருக்கிறது என்பதை நாம் அறியக்கூடும். அதனால் குழந்தையானது தன் அபிவிருத்தியின் பொருட்டு மிகவும் முயற்சியுள்ளதாக இருக்கிறது. ஒரு விசித்திர விஷயம் என்னவென்றால் குழந்தையானது உண்மையான மனோவிருத்தியை செய்துகொண்டிருக்கிறது. உதாரணமாக ஒரு பெயரைச் சொன்னவுடன் குழந்தையானது அதன் உருவத்தை ஞாபகப்படுத்திக் கொள்ளுகிறது. அது அந்த வஸ்துவின் உருவம், வர்ணம் முதலியவற்றை கிரஹித்துக்கொள்ளும் சக்தி உடையதாய் இருக்கிறது.

குழந்தையின் சுற்றுப்புறம்

சாதாரணமாக, பலவித இடையூறுகளுக்கு மத்தியில் குழந்தையானது மேலே சொன்னபடி வஸ்துக்களின் உருவம் முதலியவற்றை கிரஹிக்க வேண்டி இருக்கிறது என்று நாம் அறியவேண்டும். குழந்தைக்கு உதவி வேண்டுமென்று கேட்டால் உதவி செய்வோம். ஆனால் கிரஹிப்பதை அது தானாகவே செய்யவேண்டும். நாம் என்ன செய்ய வேண்டுமென்றால் குழந்தையைச் சுற்றியுள்ள வஸ்துக்களை சரிப்படுத்திக் கொடுக்கவேண்டும். நாம் பொம்மைகளை எடுத்து, வகுத்து புதுமாதிரியாக குழந்தையைச் சுற்றி வைக்கவேண்டும். அப்பொழுது குழந்தை தன்னிஷ்டம்போல் தனியாக வேலை செய்யும். வஸ்துக்களைப்பற்றி கிரஹிப்பது மிகவும் கஷ்டமானதுதான். இருந்தாலும் வஸ்துக்கள் அனேகமிருந்தாலும் அவைகளின் குணபேதங்கள் சிலதான். வர்ணங்களுள்ள வஸ்துக்கள் அநேகமாயிரம் இருக்கலாம். * ஆனால் வர்ணங்கள் சிலதான். அதேமாதிரி வாசனைகளுள்ள வஸ்துக்களும் புஷ்பங்களும் அனேகமாயிரம் இருக்கலாம். ஆனால் வாசனைகள் சிலதான். இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் நமக்கு ஒருவித சங்கடம் ஏற்படும். ஒரே ஒரு விதமான வர்ணமுள்ளவோ எடையுள்ளவோ வஸ்துதான் நமக்கு வேண்டும். அதற்காக நாம் செய்யவேண்டியது என்னவென்றால் ஒரேமாதிரியான அநேக வஸ்துக்களையும் வேறுவிதமான ஒன்றையும் நாம் செய்யவேண்டும் அதாவது நூற்றுக் கணக்கான வெள்ளை ஆடுகளுக்கு நடுவில் ஒரு கறுப்பு ஆடு இருந்தால் எப்படி பிரகாசமாயிருக்குமோ அதுபோல் சப்தம், வாசனை, ருசி, முதலியவைகளுக்குத் தகுந்தபடி சாமான்களை நாம் தயார் செய்யவேண்டும். குணபேதங்களை அறிந்துகொள்ளும் பொருட்டு குழந்தைக்கு ஒத்தாசையாக மனோ சாஸ்திரத்திற்கு அனுகூலமான சில தயாரிப்புகளும் வேண்டும். முதலில் வித்தியாசங்கள் ஜாஸ்தியாகத் தோன்றும். போகப்போக மிகவும் குறைந்து கடைசியில் வஸ்துக்களின் குணாதிசயங்களின் ஒற்றுமையைக் கண்டறிவதில் குழந்தைக்கு மிகவும் ஆசை தோன்றும்.

மனோசாஸ்திரத்தின் இன்னொரு சூக்ஷமம் என்னவென்றால் புலன்களைத் தனித்தனியாக பிரித்துப் பார்ப்பது. சாதாரண மனுஷ்யனை விட குருடனாயிருப்பவனுக்கு கேட்கும் சக்தி மிகவும் தீவிரமாய் இருக்கிறது என்பது எல்லாருக்கும் தெரிந்ததுதான். சாதாரண ஜனங்களை விட செவிடா யிருப்பவர்கள் மிகவும் சூக்ஷமமான விஷயங்களை அறிந்து கொள்வதில் அதிக சாமர்த்திய முடையவர்கள் என்பதும் எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இதற்கு காரணம் அவர்கள் புலன்களில் ஒன்றை புதுதினுசான வழியில் உபயோகிக்கிறார்கள் என்னலாம். ஒரு புலனை அடக்கினால் மற்றது தீவிரமாகக்கூடும். உதாரணமாக, ஒன்று சுறசுறப்பாயும் மற்றொன்று வழவழப்பாயுமுள்ள இரண்டு இடங்களை முதலில் கண்களை மூடிக்கொண்டும் பிறகு கண்களைத்திறந்து கொண்டும் தொட்டோமானால் முதலில் தொட்டதை விட பின்னால் தொட்டது மிகவும் தெளிவாயிருக்கிறது. மற்றொரு உதாரணமாக, ஒரு துணியை கண்களைத்திறந்துகொண்டு தொடும்பொழுது ஏற்படும் உணர்ச்சியைவிட கண்களை மூடிக்கொண்டு தொடும்பொழுது ஏற்படும் உணர்ச்சி வித்தியாசமாய் இருக்கிறது. இந்த விஷயத்தை உபயோகப்படுத்தி, குழந்தைகளைக் கண்ணைமூடிக்கொள்ளச் சொல்லி சில புலன்களின் உபயோகத்தை அல்லது அறியும் சக்தியை நன்கு உணர்ந்து மனதில் நன்றாக அவகாசப்படும்படி செய்யலாம். இது பழக்கத்தினால் ஏற்படக்கூடியது. இந்தப் பழக்கங்களுக்குத் தகுந்தபடி சாமான்களை சரிப்படுத்திவைப்பது நாம் செய்யக்கூடிய இன்னொரு உதவியாகும்.

இதை நாம் உணர்ச்சி யறிவைப் பிரிப்பதாகச் சொல்லலாம். ஆகையால் மனதில் அவகாசப்படுத்திக்கொள்ளுவதற்கு சாமான்கள் ஆதாரமாக இருக்கின்றன. இந்த சாமான்களின் வரிசைக் கிரமத்தைக் கொண்டு குழந்தைகளுக்கு புலனறிவால் ஏற்படக்கூடிய வஸ்துக்களைப் பற்றி கற்றுக் கொடுக்கலாம்.

பார்வையினால் அறிவு

பார்வை யறிவையும் நாம் வகுக்கலாம். சாமான்கள் வர்ணம், உருவம், பருமன் இவைகளில் வித்தியாசப்படலாம். ஆகையால் வித்தியாசமான சாமான்கள் ஒவ்வொரு விஷயத்தையும் தனித் தனியாக அறிவதற்கு பொறுக்கி எடுக்கப்பட்டிருக்கின்றன. நீளம், அகலம், உயரம் இதுகளின் வித்தியாசத்தைக் கண்டறிய சில சாமான்கள் இருக்கின்றன. க்ஷேத்திர கணித சம்பந்தமாக பிரித்தறிய சில வஸ்துக்கள் இருக்கின்றன. இதேமாதிரி குழந்தையின் புலன்களெல்லாம், உணருதல், ருசி பார்த்தல், வாசனை யறிதல் முதலியவைகளில் பழக்கலாம். குழந்தைக்கு சரியான வழியில் கற்பிப்பதற்கு அதைச் சுற்றியுள்ள சாமான்களும், மனோ சாஸ்திரமும்தான் சாதனங்களாக இருக்கின்றன.

சாரணீயம்—அதன் உண்மையும் முறையும்

(326-ஆம் பக்கத் தொடர்ச்சி)

S. ஸ்ரீநிவாசன், போர்டு உயர்தர பாடசாலை, செங்கம்.

24. சாரணீயமும் தேசீயமும்

சாரண சங்கங்களுக்கெல்லாம் பொதுவான ஒரு தலைமை ஸ்தாபனம் இருக்கவேண்டுமென்பது சர்வதேச சங்க லக்ஷியத்தை ஒத்திருக்கிறது. சர்வதேசங்களுக்கும் பொதுவான ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தி, உலகம் முழுவதையும் ஒரே குடையின்கீழ் கொண்டுவந்துவிடவேண்டுமென்று இருபது வருஷத்துக்கு முன் சில லக்ஷிய வாதிகள் ஒரு பெரிய கனவுகண்டனர். சர்வதேச சங்கம் ஏற்பட்டபோதிலும், அது அனுபவத்தில் ஒருகனவாகவே இன்னும் இருந்துவருகிறது. அப்படியே தான் சர்வதேச சாரண ஸ்தாபனமும். உலகம் பலவிதம். ஆங்காங்குள்ள நிலைமையை ஒட்டியே இயக்கங்களும். சீர்திருத்த முயற்சிகளும் நடத்தப்படவேண்டும். மற்ற முறைகளில் இந்தியா மேனாட்டு வழிகளில் மோகங்கொண்டு, அவைகளைப் பெருவாரியாக 'காபி' அடித்ததுபோலவே, சாரணீயத்திலும் முதலில் நாம் இங்கிலாந்தின் முறையை அப்படியே இந்தியாவில் நடத்த முயன்றோம். அது இயற்கைக்கு விரோதமாயிருந்ததுமல்லாமல், சாமான்ய ஜனங்களின் அவநம்பிக்கையையும் வெறுப்பையும் அடைந்தது. சில வருஷங்களுக்கு முன்புதான் சாரணர்கள் அவரவர்களின் சொந்த பாஷையில் வாக்குறுதி செய்யும் வழக்கம் ஆரம்பித்தது. சில சங்கங்களில், இந்திய சாரணர்கள், ஆங்கிலச் சாரணர்களைப்போலவே ஐரோப்பிய தொப்பி - **Hat** - யைப் போட்டுக்கொள்ள வேண்டுமென்றுகூட விதித்திருந்தனர்! சாரணப் படைகளின் பெயர்களும் விளையாட்டுகளும், பாட்டுகளும், வெளிச் சின்னங்களும மேனாட்டுப் பழக்க வழக்கங்களைத் தழுவியதாகவே இருந்தன. இந்திய நடையை ஒட்டியதாக இல்லை. சாரண முறையே இந்தியாவில் அசம்பாவிதமாகக் காணப்பட்டது.

இக்குறைகளை யெல்லாம் கூடியவரையில் முதலிலிருந்தே, நீக்கி; சாரணப் பயிற்சி தேச தர்மத்துடன் இணங்கி யிருக்கும்படி அமைத்து நடத்தியது சேவாசமதி ஒன்றுதான். மற்ற சங்கங்கள் சுயேச்சையின்றி துரைத்தன நிழலில் நடந்தன. அவைகள் வெளிப்பகட்டிலும், சடங்குகளிலும் அதிககவனம் செலுத்தின. சேவா உணர்ச்சியைத் தூண்டுவதும், சிலப் பயிற்சியும் இரண்டாம் பக்ஷமாகவே யிருந்தன. பெரிய பட்டணங்களில் வசிக்கும பிள்ளைகளுக்கே சாரணப் பயிற்சி ஏற்பட்டதென்று எல்லாரும் நம்பிவந்தனர். கிராமங்களில் அவ்வியக்கம் புகுந்து அங்கு வசிக்கும் பெரும்பாலான ஜனங்களுக்கு அது உபயோகப்பட

வேண்டுமென்று அவ்வளவாக உறுத்தப்படவில்லை. பணக்காரப் பிள்ளைகளுக்கென ஏற்பட்ட ஒரு பிரத்யேக முறையே ஒழிய அதற்கும் கிராம ஜனங்களுக்கும் எவ்வித சமமந்தமும் இல்லை யென்னும் எண்ணம் இன்னும் பலர் மனதில் இருந்துவருகிறது. சுருங்கச் சொல்லின், சாரணீயம் தேசீய மயமாகவில்லை. அது குளிர் தேசத்திலிருந்து இங்கு கொண்டு வந்து நடப்பட்ட ஒரு மரத்தைப்போல், புதிய சந்தர்ப்பங்களுடன் இசையாமலேயே இருந்துவந்தது. சேவாசமதி சாரணர்களின் தேசீயப் போக்கை பேடன் பௌவல் சாரண இயக்கம் சிறிது அவநம்பிக்கையுடனேயே பார்த்துவந்தது. ஆனால் தேசீயமென்னும் உரமில்லாமல், சாரண இயக்கம் இந்தியாவில் ஓங்கி வளராது என்னும் உண்மையை வலியுறுத்த ஒரு சம்பவம் நேர்ந்தது. அது வருந்தத்தக்க சம்பவமெனினும், அநேக தீமைகள் நன்மையாக முடிவதுபோல், அதுவும் சாரண இயக்கத்துக்கு ஒரு நன்மையாகவே முடிந்தது.

25. பேடன் பௌவல் இந்தியரை அவமதித்தது

1937-ஆம் வருஷம் இந்திய சாரணீயத்தில் ஒரு முக்கியமானது. அவ்வருஷத்தில்தான் சாரணீயம் தேச உணர்ச்சி பெற்றது. சாரண இயக்கத்தின் மூல புருஷரான பேடன் பௌவல் அவ்வருஷ ஆரம்பத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்தார். தேசத்தின் பல பாகங்களிலும் அவர் பிரயாணஞ்செய்து, சாரணப் படைகளின் அமைப்பையும், சாரணர்களின் வேலைத் திறனையும் சுற்றிப் பார்த்தார். வருஷ முடிவில் அவர் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றார். அங்கு அவர் தன் இந்திய அநுபவங்களைப்பற்றி பத்திரிகைகளுக்கு எழுதினார். அதில் அவர் இந்தியர்களின் ஒழுக்கத்திலும் குணத்திலும் சில முக்கியமான குறைகள் இருப்பதாகவும், சாரண இயக்கம் அக்குறைகளை நிவர்த்திக்கவில்லை யென்றும் குணதோஷங் கூறினார். அது இந்தியாவுக்கு பத்திரிகைமூலம் எட்டிய போது இந்தியமக்களின் மனம் புண்பட்டது. முக்கியமாக அவர் இந்திய பாஷைகளில் '**Honour**' என்னும் ஆங்கிலப் பதத்துக்குச் சரியானபதம் இல்லையென்று சாதித்து, இந்தியாவை அவர் நன்கு அறிந்துகொள்ளும் எண்ணமில்லாமலேயே, உல்லாஸமாகச் சுற்றிவந்தார் என்று எல்லோருக்கும் பட்டது. உடனே எங்கும் கண்டனமும், ஆட்சேபணைகளும் கிளம்பின. பேடன்பௌவல் தன் அபவாதக் கூற்றை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமென்றும், தக்க பரிகாரமும் செய்யவேண்டுமென்றும் கேட்கப்பட்டது. அரசாங்கத் தலைவர்கள் சமாதானம் கூறினர். பேடன்பௌவல் ஒரு நொண்டிச் சமாதானத்தை வெளியிட்டார். அது யாருக்கும் திருப்தியளிக்கவில்லை.

26. சாரண இயக்கத்தில் ஒரு புதிய திருப்பம்.

சென்னையிலும் பம்பாயிலும் குறிப்பாக அதிக உணர்ச்சி ஏற்பட்டது, சென்னை மாகாணத்தில் அநேக முனிஸிபாலிடிகளும், ஜில்லா

போர்டுகளும் டில்லியிலுள்ள பேடன் பௌவல் சங்கத்துடன் கொண்டிருந்த இணைப்பை அறுத்துக்கொண்டன. சென்னைக் கார்ப்பொரேஷன் சேவாசமிதியுடன் சேர்ந்துவிட்டது. மாகாணத்தில் ஏற்பட்ட பலமான உணர்ச்சியை ஒருவாறு மதித்து, டெல்லியிலுள்ள தலைமை ஸ்தாபனத்திலிருந்து சென்னை மாகாண பேடன் பௌவல் சங்கம் விலகிக்கொள்ள தீர்மானித்தது. அதனால், அதோடு இணைக்கப்பட்டிருந்த பல சாரணப்படைகளுள் திருப்தி ஏற்பட்டது. இல்லாவிடில் அவைகள் ஒவ்வொன்றும் பிரிந்துபோய்விடத் தயாராயிருந்தன.

இந்த சமயத்தில் பம்பாயில் 'இந்திய தேசீய சாரண சங்கம்' என்னும் பெயருடன் ஒரு தேசீய சங்கம் ஏற்பட்டது. இது ஏற்பட்ட சிறிது காலத்திற்குள், இந்தியாவிலுள்ள தேசீயச் சாரண சங்கங்களெல்லாம் ஒரே பொது ஸ்தாபனத்தின் கீழ் கொண்டுவரப்படவேண்டுமென்று சிலர் யோசனை கூறினர். தேசத்திலுள்ள சாரண சங்கங்களுக்குள் பழையதும், பெரிதும், இந்தியாவெங்கும் பரவியதுமான சேவா சமிதியே இம்முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், அதற்காக இந்தியாவிலுள்ள பல சங்கங்களின் மகாநாடு ஒன்றை அது கூட்டவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர்.

1937-ஆம் வருஷம் நவம்பர் மாதத்தில் அலகாபாத்தில் ஒரு மகாநாடு நடைபெற்றது. டில்லியிலுள்ள பேடன் பௌவல் தலைமை ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களும் அதற்கு வந்திருந்தனர். அதன் தலைவரான சடாரி நவாப் தலைமை வகித்தார். அம் மகாநாட்டில், இந்தியாவுக்கென ஒரு சுயேச்சைவாய்ந்த சாரண சங்கம் அமைக்கப்படவேண்டுமென்று தீர்மானித்தனர். அதற்காக வேண்டிய விதிகளையும், சட்டங்களையும் வரைய ஒரு கமிட்டியையும் ஏற்படுத்தினர். கமிட்டியார் இயற்றும் விதிகளையும் சட்டங்களையும் பரிசீலனை செய்ய மறுபடியும் ஒரு மகாநாடு கூட்டுவதென்றும் அப்போது தீர்மானிக்கப்பட்டது. சாரணர்களின் வாக்குறுதியைப்பற்றி நீண்டதோர் விவாதம் நடந்தது. ஒரு சாரர் அவ்வாக்குறுதியிலுள்ள 'அரசர் சக்ரவர்த்தி' (King Emperor) யென்னும் பதத்தை எடுத்துவிடவேண்டுமென்றனர். பேடன் பௌவல் சங்கத்தார் அதற்குச் சம்மதிக்கவில்லை. கடைசியாக ஒரு சமரஸம் ஏற்பட்டது. 'கடவுளுக்கும், அரசர் சக்ரவர்த்திக்கும், தேசத்துக்கும்' என்பதற்குப் பதிலாக 'கடவுளுக்கும், அரசாங்கத்துக்கும், தேசத்துக்கும்' என்று மாற்றிக்கொள்வது எல்லாருக்கும் திருப்தியளிக்குமென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது மகாநாடு 1938 ஏப்ரல் மாதத்தில் கூடியது. அதற்கு பேடன் பௌவல் சங்கத்தின் பிரதிநிதிகள் முன் வந்ததைவிட அதிகமாக வந்தனர். வாக்குறுதியைப்பற்றிய விவாதம் மறுபடியும் கிளம்பியது. அதில் எவ்வித மாறுதலும் செய்யக்கூடாது என்று அவர்கள் முரண்டிக்கொண்டனர். மற்றவர்கள் முதல் மகாநாட்டின்

தீர்மானத்தை விட்டு பிரளக்கூடாது என்று வாதித்தனர். ஒற்றுமை ஏற்படவில்லை. மகாநாடு, ஒரு முடிவுக்கும் வராமலேயே, கலைந்து விட்டது. ஆனால் பே. பௌ. சங்கத்தினர் தவிர மற்ற சங்கங்களெல்லாம் ஒன்று சேர்ந்து 'இந்தியா சாரண சங்கம்' அல்லது 'ஹிந்துஸ்தான் சாரண சங்கம்' என்று ஒரு அகில இந்திய ஸ்தாபனத்தை ஏற்படுத்துவதெனத் தீர்மானித்தார்கள். இதில் கலந்து கொண்டவர்கள் சேவா சமிதி, சென்னை வாலிப சாரண சங்கம் (பே. பௌ. சங்கத்திலிருந்துப் பிரிந்துவிட்ட சங்கம், பம்பாய் வாலிப சாரண சங்கம், பம்பாய் கார்ப்பொரேஷன் வாலிப சாரண சங்கம், இந்திய தேசிய சாரண சங்கம், பரோடா, குவாலியர் சாரண சங்கங்கள் முதலியன. 1938 ஆம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் இப்புதிய சங்கத்தை ஆரம்பிப்பதென முடிவு செய்யப்பட்டது.

27. ஹிந்துஸ்தான் சாரண சங்கம்

இக்கூட்டம் கூடிய ஒரு வாரத்துக்குள், சேவா சமிதியின் ஆலோசனைசபைக் கூடி புதிதாக ஏற்படவிருக்கும் ஹிந்துஸ்தான் சாரணசங்கத்தில் கலந்து விடுவதென ஒரு தீர்மானம் செய்தனர். பம்பாய் சாரண சங்கமும் அதேமாதிரி ஜூலை மாதத்தில் தீர்மானித்தது. இவ்விரண்டு சங்கங்களின் நிர்வாகஸ்தர்களும் ஏகோபித்து தங்களோடு இணைக்கப்பட்டிருந்த கிளைச்சங்கங்களுக்கு ஒரு திட்டமான வழியைக் காட்டிவிட்டன அதாவது ஹிந்துஸ்தான் சாரண சங்கத்தில் சேர்ந்துவிடுவது என்பதே. சென்னை சங்கத்தின் காரியாஸ்தர்கள் மட்டும் இவ்வாறு செய்யவில்லை. அவர்கள் சென்னையிலுள்ள சேவாசமதி கிளைச்சங்கத்தை தங்களுடன் சேர்த்துக்கொண்டு, அகில இந்திய தொடர்பு இல்லாத ஒரு புதிய மாகாண ஐக்கிய சங்கத்தை ஏற்படுத்த முயன்றனர் ஆனால் சேவாசமதி இதற்கு இணங்கவில்லை. இரண்டுமாக ஹந்துஸ்தான் சாரண சங்கத்தில் சேர்ந்து, மாகாணத்தின் ஒரே சங்கமாக விளங்கவேண்டுமென்று அது விரும்பியது. ஏற்கனவே, தான் ஒரு அகில இந்திய சாரண சங்கத்தின் உறுப்பாக விருந்து வந்ததினின்றும் அது விலகிக் கொள்ள மறுத்து விட்டது

இதே நிலையில்தான் இப்போது சாரணச் சங்கங்கள் இருந்து வருகின்றன. ஆனால் இதை நீடித்திருக்க விடக்கூடாது. இந்தியா முழுவதுக்கும் ஒரே பொது ஸ்தாபனந்தான் இருக்கவேண்டும். அதோடு மாகாண, ஸமஸ்தான சங்கங்கள் இணைக்கப்பட்டிருக்கவேண்டும். சமீபத்தில் நமது மாகாணத்தில் இருந்து வரும் இரண்டு சங்கங்களும் ஒன்று சேர செய்த முயற்சி வீணானது வருந்தத்தக்கது. ஒரு பொது ஸ்தாபனத்துடன் தொடர்பில்லாத பல பிரதேச சங்கங்கள் இருப்பது தேச நன்மைக்கும் சாரண இயக்கத்தின் நோக்கத்துக்கும் தீமையை விளைவிக்கும்.

28. அகில இந்திய ஸ்தாபனத்தின் அவசியம்.

தேசத்தில் கட்சிப்பிளவுகளும், தலைவர்களுக்குள் லக்ஷிய வேறுபாடுகளும், ஜாதிச்சண்டையும் தற்போது அதிகரித்திருக்கின்றன. இந்த சமயத்தில், யௌவன இந்தியாவையே தேசத்தினர் நம்பியிருக்கின்றனர். இப்பிளவுகளும், வேற்றுமைகளும் ஒழியவேண்டுமானால், தேசத்தின் வாலிபர்களைச் சரியான முறையில் பழக்கவேண்டும். சிறுவர்களின் வாழ்க்கை லக்ஷியங்களும் கனவுகளும் நிறைந்தது. இவைகளைப் பிற்காலத்தில் காரியத்தில் காணும்படியான மன உறுதியை அவர்கள் பெற வேண்டும். இதற்குச் சாரணீயம் ஒருவழி தேசத்தின் லக்ஷியம் இன்னது என்பதை அவர்கள் இளமையிலிருந்தே உணரவேண்டும். ஒன்றுபடுவதே எல்லா நோக்கங்களுள்ளும் மேலானது. அந்த நோக்கம் சரிவர நிறைவேரவேண்டுமானால், இந்தியாவில் பல சாரண சங்கங்கள் தனித்தனியே சேராமல் இருந்துவருவது கூடாது. சிறுவர்களின் பயிற்சிக்குப் பொறுப்பேற்று நிற்கும் ஒவ்வொருவரும் சாரணீயத்தின் சாத்தியங்களையும் முறைகளையும் யோசித்து அறியவேண்டும். வகுப்பு வாதங்களுக்கும், ஜாதிப் பூசல்களுக்கும், கக்ஷி உணர்ச்சிக்கும், தப்பான கல்வி முறையே சிறிதளவு காரணமென்று சொல்லவேண்டும். ஆகையால் தேசநலமாகிய லக்ஷியத்தைக் கருத்தில் கொண்டவர்கள், தற்போது யுவர்களுக்குச் சரியான வழியில் கல்விகற்பிக்க பல முயற்சிகள் செய்து வருகின்றனர். இந்தசமயம் சாரண இயக்கத்தில் எவ்வித வேற்றுமையும் இருக்கக்கூடாது. சாரண இயக்கம் இறுவர்களுக்கு இளமைப் பருவத்தை நன்கு அனுபவிக்கக் கற்றுக்கொடுக்கிறது. இவ் வியக்கத்தின் நோக்கம் தேசியத்துக்கு அஸ்திவாரமாக அமைந்திருக்கிறது. இந்தியா முழுவதுக்கும் ஒரேஸ்தாபனமாக இராவிடில், தேசியத்தை வளர்க்க முடியாது. தேசியம் ஒரு குற்றமல்ல. தேசியமே சர்வதேசியத்துக்குவழி. தேசியத்துக்கும் சாரண இயக்கத்துக்கும் மிகுந்த ஒற்றுமை யிருக்கிறது. தேசியத்தைக் கும்பிட ஒரு தனிக்கோவில் வேண்டாம். அதை சாரண இயக்கத்தின் மூலம் தேசியமாக மாற்றவேண்டும். அதுவே நாம் சுதந்திரத்துக்குச் செய்யவேண்டிய தொண்டு. தேசத்தின் பலபாகங்களில் லக்ஷியபேதமுள்ள சாரண சங்கங்கள் இருப்பது தேசமுன்னேற்றத்துக்குத் தடையே. சாரண இயக்கத்தில் சம்பந்தப்பட்டவர்கள் இதை அறிந்து, இந்தியாவில் ஒரேசாரண இயக்கம் நடைபெற உதவிவேண்டும்.

— தொடரும்.

Gazette Extracts

DRAFT AMENDMENT TO THE RULES UNDER THE MADRAS ELEMENTARY EDUCATION ACT

Fort St. George, January 26, 1940 (*G. O. No. 139, Education*).

No. 67

The following draft of an amendment to the rules published with Law (Education) Department Notification No. 45, dated the 21st February 1922, at pages 146—178 of Part I-B of the *Fort St. George Gazette*, dated the 21st February 1922, as subsequently amended, which is proposed to make in exercise of the powers conferred by section 56 of the Madras Elementary Education Act, 1920, (Madras Act VIII of 1920), is hereby published as required by sub-section (1) of the said section for the information of all persons likely to be affected thereby.

Notice is hereby given that the draft will be taken into consideration after two weeks from the date of publication of this notification, and that any objection or suggestion which may be received from any person with respect thereto before the expiry of the period aforesaid will be considered by the Government of Madras.

DRAFT AMENDMENT

In the said rules, in the proviso to the rule under the heading "Section 3 (xii)—School Age," for the words "Local Government," the words "Government of Madras" shall be substituted.

AMENDMENTS TO THE MADRAS EDUCATIONAL RULES AND THE GRANT-IN-AID CODE

Fort St. George, March 6, 1940 (*G. O. Ms. No. 368, Education*).

No. 71

The following amendments to the Madras Educational Rules and the Grant-in-Aid Code are published:—

I

THE MADRAS EDUCATIONAL RULES.

AMENDMENT

For Rule 10-A, introduced by Notification No. 327, dated the 4th November 1939, published at page 724 of Part I-B of the *Fort St. George Gazette*, dated the 14th November, 1939, the following shall be substituted:—

"10-A. No teacher shall be appointed to, or allowed to continue in a school after the completion of his or her fifty-fifth year. The director may, however, relax this rule for sufficient reasons in the case of teachers in schools under private management up to the age of sixty. In exceptional cases, he may permit a teacher over sixty to work in a school.

This rule shall come into force from the 1st July 1940."

II

THE GRANT-IN-AID CODE

AMENDMENT

For Rule 16, introduced by Notification No. 327, dated the 4th November 1939, published at page 724 of Part I-B of the *Fort St. George Gazette*, dated the 14th November 1939, the following shall be substituted:—

Rule 16.—No grant will ordinarily be paid on behalf of the members of the teaching staff who have completed their fifty-fifth year. The Director may, however, relax this rule in special cases up to the age of sixty. No grant will be paid on behalf of teachers who are retained in service beyond sixty years of age.

This rule shall come into force from the 1st July 1940."

AMENDMENTS TO THE RULES RELATING TO RECOGNITION AND AID TO ELEMENTARY SCHOOLS

Fort St. George, March 13, 1940 (G. O. Ms. No. 415 Education).

No. 72

The following amendment shall be made to the rules relating to recognition and aid to elementary schools published with Education Department Notification No. 243, dated the 21st August 1939, at pages 556-568 of Part I-B of the *Fort St. George Gazette,* dated the 29th August 1939, as subsequently amended :—

AMENDMENT.

Chapter II—Rules for Aid.

In the proviso to Rule 2 (i) (*a*), for the words "the 1st April of the year in which he passed the Training-School Leaving Certificate Examination," the words "the day following the last day of the Training-School Leaving Certificate examination which he passed" shall be substituted.

Fort St. George, March 13, 1940 (G. O. Ms. No. 419 Education).

No. 73

The following amendment shall be made to the rules relating to recognition and aid to elementary schools published with Education Department Notification Mo. 243, date the 21st August 1939, at pages 556 to 568 of Part I-B of the *Fort St. George Gazette,* dated the 29th August, 1939, as subsequently amended :

AMENDMENT.

Chapter II—Rules for Aid.

In sub-rule (2) of Rule 4, the following clause shall be added to the proviso as clause (iii) :—

"(iii) grant for two teachers may be assessed in a complete school with standards I to V if the average attendance therein is 30 or over but is less than 40."

Note:—This amendment will come into force from 1st June 1940.

AMENDMENTS TO THE RULES RELATING TO RECOGNITION AND AID TO ELEMENTARY SCHOOLS.

Fort St. George, March 16th, 1940 (G. O. Ms. No. 448, Education).

No. 78

The following amendments shall be made to the rules relating to recognition and aid to elementary schools published with Education Department Notification No. 243, dated the 21st August 1939, at pages 556–568 of Part I-B of the *Fort St. George Gazette,* dated the 29th August, 1939, as subsequently amended :—

AMENDMENTS.

Chapter II—Rules for Aid.

In Rule 1, for the figures "156" against the item "For each teacher of the Higher Elementary Grade," the figures "168" and for the figures "212" against the item "For each teacher of the Secondary Grade" the figures "216" shall be substituted.

These amendments shall come into force from 1st April 1940.

G. H. COOKE,
Secretary to Government.

AMENDMENTS TO THE RULES RELATING TO RECOGNITION AND AID TO ELEMENTARY SCHOOLS

Fort St. George, February 20, 1940 (G. O. No. 286 Education).

No. 80

The following amendments shall be made to the rules relating to recognition and aid to elementary schools published with Education Department Notification No. 243, dated the 21st August 1939, at pages 556-568 of Part 1-B of the *Fort St. George Gazette*, dated the 29th August 1939, as subsequently amended;—

AMENDMENTS

Chapter I—Rules for Recognition.

(i) For Rule 14, the following rule shall be substituted namely :—

"14. The Director of Public Instruction, may, after due enquiry, declare a teacher to be unfit for employment in a recognised school. He may likewise declare a person to be unfit to be the manager or correspondent of a recognized school."

(ii) The following rule shall be added as rule 14-A :—

"14-A. The Director of Public Instruction may refuse recognition to, or withdraw recognition from a school in which is employed a teacher whom he has declared unfit to be a teacher, or a teacher whose certificate has been cancelled or suspended under Rule 154 of the Madras Educational Rules, or whose service register has been withdrawn by the Director, in the case of girls' schools, or the Divisional Inspector in the case of boys' schools. The Director of Public Instruction may also refuse or withdraw recognition if a school is under the management of a person who has been declared by him to be unfit to be a manager or correspondent of a recognised school."

Chapter II—Rules for Aid.

(i) For clause (ii) to the proviso to Rule 4 (2), the following shall be substituted, namely :—

"Pupils who have remained in the same standard for more than two years, pupils below the age of five, and pupils admitted during periods other than those prescribed by Rule 22 (*a*) of the rules for recognition without the sanction of the Deputy Inspector or the Sub-Assistant Inspectress of Girls' Schools concerned shall be excluded."

(ii) In Rule 24, the following shall be added at the end, namely "or (*d*) which is under the management of a person declared by the Director of Public Instruction to be unfit to be a manager or correspondent."

Resolutions that will come up for consideration at the Provincial Educational Conference, Ambasamudram

I. Provident Fund

1. *From several associations* :

(*a*) This conference requests the Provincial Government to increase the rate of contribution by the Government to the Provident Fund of Teachers in aided schools from $\frac{1}{3}$ to $\frac{1}{2}$ of the amount to the credit of the subscriber at the time of the closure of his account.

(*b*) This conference requests the Government to permit teachers in aided schools to pay insurance premiums from out of their Provident Fund Deposits.

II. Local Body Employees.

2. *Tanjore District Teachers' Guild*:

This conference invites the attention of the Government that the omission of Rule 22 of Section 1 and Rule 23 of Section 2 of the G. O. No. 5062 L. & M. dated 23rd November 1934 and in sections 1 and 2 of the subsequent G. O. No. 2342 L. S. G. dated 2–6–1936, regarding the re-entertainment of retrenched hands counting broken pieces of service for all purposes of service—affects adversely the prospects of many Municipal and Local Board Employees, though they have put in long periods of Service, permanent or temporary and requests the Government that the said Rules No. 22 of section 1 and No. 23 of section 2 of G. O. No. 5062 L. & M. dated 23–11–1934 may be added to G. O. No. 2342 L. S. G. dated 2–6–1336 with effect from the date of the coming into operation of G. O. No. 2342 L. S. G. dated 2–6–1936.

III. Elementary Education

3. *E. R. High Schools Association, Trichinopoly*:

This Conference considers that the Service Register for Elementary school teachers is no solvent for security of tenure and therefore urges that it should be so modified as to provide for termination only on specific grounds.

This Conference is against the proposed increase of the number of working days for Elementary Teachers from 200 to 220 with five working hours as it will cause undue strain on pupils and teachers alike.

5. This Conference considers that an enquiry should be instituted into the working of Elementary Education Policy.

6. This Conference requests the Government to revise the Elementary Education Grant Rules to remove the complexity of the Grant formula and to assure teachers and managements alike their respective quota.

7. *The Madras Teachers Guild*:

In view of the difficulties experienced by the teacher-managers in the running of Elementary schools and with a view to promote better understanding and co-operation between teacher-managers and the Elementary school teachers, this Conference appeals to the teacher-managers to consider the desirability of converting their schools into co-operative Teacher Committee schools.

IV. Educational Policy.

8. *Madras Teachers Guild*:

This Conference is of opinion that the public should urge upon the attention of the Government the necessity for the immediate consideration of its present policy in regard to the management of Elementary and Secondary Schools and for the formulation of a new educational policy suited to the modern requirements of Education in this Presidency.

V. Grant-in-aid.

9. *Madras Teachers Guild*:

This Conference is of opinion that the Managers of aided schools should press upon the Government the necessity for the revision of the grant-in-aid-Code so as to improve the equipment and condition of service in schools and also to ensure security of tenure of teachers.

VI. Board of Education.

10. *Madras Teachers Guild*:

This Conference requests the Government to create a Provincial Advisory Board of Education consisting of the representatives of the Government, the Universities managements and the South India Teachers' Union to advise on matters educational and professional.

VII. Service Condition.

11. *Madras Teachers Guild*:

In view of the growing discontent among teachers in aided elementary and secondary schools, this Conference requests the Government to amend the Contract (Appendix 28 M.E.R.) between the Teachers and Managements in aided Secondary Schools on the lines of the resolution of the Executive Board of the Union of 18th December 1939.

VIII. G. O. on Elections.

12. *Malabar District Teachers Guild*:

This Guild requests the Government to withdraw the G. O. banning teachers in private aided institutions from seeking election to seats in local Board and Municipalities and Legislatures.

IX. Admission to L. T. Course.

13. *Kurnool Municipal High School Teachers Association*:

That the Government be requested to admit for the L. T. Course Secondary Grade teachers who have passed the B.A. by private study without demanding the fee of Rs. 160 as is done now.

X. Text Books.

14. *The Salem District Teachers Guild*:

This Conference resolves to request the Government to cancel the existing G. O. relating to the prescription of text-books and issue instructions leaving the choice of suitable text-books entirely to individual institutions.

நமது கடிதப் பெட்டி

" ஆசிரிய யூனியன்களுக்கு வேண்டுகோள் "

" ஸ்தல ஸ்தாபனத் தலைவர்கள் முன் வருவார்களா ?"!

ஆசிரியர், பாலர் கல்வி,

ஐயா !

ஆரம்ப ஆசிரிய யூனியன்கள் ஏற்பட்டு சுமார் ஒரு வருஷம் ஆகப் போகிறது. ஆனால் ஒன்றிரண்டு யூனியன்களின் கூட்ட நடவடிக்கைகள் தான் பாலர் கல்வியில் வெளி வந்திருக்கின்றன. ஆசிரியர்கள், யூனியன் ஏற்படுத்திக் கொள்ளலாமென்றும், அவைகளை தாங்கள் அங்கீகரிப்பதாகவும் அதில் நிறைவேற்றும் தீர்மானங்களை தங்களுக்கு அனுப்பி வைக்குமாறும், சர்க்கார் தாமாகவே தெரிவித்திருப்பது, ஆசிரியர்களுக்கு சர்க்கார் அளித்துள்ள ஓர் சுதந்திரமாகும். இந்த சுதந்தரத்தின் பலனாக ஆங்காங்குள்ள யூனியன்களும் எம்முறையில் நடைபெறுகின்றன ? என்னென்ன குறைபாடுகளை நிவர்த்திக்க வேணுமாய் கோறுகின்றன? இதுவரையில் அவைகள் செய்துள்ள வேலையென்ன? என்பதற்கு பிரதி மாதமும் 'பாலர் கல்வியில்' அதனதன் நடவடிக்கைகளை சுருக்கமாக வெளியிட்டும், வருடத்திற்கொருமுறை தங்கள் வேலைகளை புத்தக ரூபத்தில் வெளியிட்டும் வருவார்களாகில் ஒரு யூனியன் அபிப்ராயத்தை மற்ற யூனியன்கள் அறியவும், இப்படியாகச்செய்யும் செய்கையே பல யூனியன்கள் ஒரு யூனியனாக விளங்கவும் மார்க்கமாகும். இந்த விஷயத்தில் தென்னிந்தியாவில் ஆரம்ப ஆசிரியர்களுக்காகவே உழைக்கும் பத்திரிகையான 'பாலர் கல்வி' ஆசிரியர் யூனியன்களுக்கு மிக்க உபயோகமாயிருக்கும். இன்றும் நூற்றுக்கு குறைந்தது முப்பது பள்ளிகள் இந்தப் பத்திரிகையைப்பற்றியே அறிந்தில. ஆசிரியர்களுக்காக உழைக்கும் ஒரு பத்திரிகையை ஆசிரியர்கள்தான் உற்சாகப்படுத்த வேண்டும். முடிவாகக் கூறுமிடத்து ஒவ்வொரு உபாத்தியாயரும்கூட இப்பத்திரிகைக்கு சந்தாதாரராதல் நலமென்று கூறலாம். ஆகவே ஆரம்ப ஆசிரிய யூனியன்கள் பாலர் கல்வியைப் பரப்புவதில் சிரத்தை கொள்வதும், அதற்குக் கைம்மாறாக தென் இந்திய ஆசிரிய சங்கத்தார், ஆசிரியர் அனுப்பும் யூனியன் நடவடிக்கைகளை பிரசுரிப்பதையும் பரஸ்பர உதவியாகக் கொண்டால் அது மிக்க அழகாகும். இந்த முறையால் தாலூகா யூனியன்களிலிருந்து ஜில்லா யூனியன், மாகாண யூனியன் என்றெல்லாம் ஏற்படுத்திக்கொண்டு ஒற்றுமையாய், யூனியன் என்ற பதத்தின் உண்மை அர்த்தத்திற்குப் பாத்திரமாய், ஐக்கியமாய் இருந்து ஆசிரியர்கள் குறைகளை நிவர்த்திக்க பாடுபடலாம்.

சமீபத்தில் தென்னாற்காடு ஜில்லா போர்டு பிரஸிடெண்டு அவர்கள், பாலர் கல்வியை அந்த ஜில்லாவிலுள்ள ஹையர் எலிமெண்டரி ஸ்கூல்களுக்கெல்லாம் அனுப்பி வைக்குமாறு ஏற்பாடு செய்தார். கூடிய சீக்கிரத்தில் எல்லா ஸ்கூல்களுக்குமே சப்ளை செய்ய ஏற்பாடு செய்வாரென நம்புகிறேன். இதுபோலவே மற்ற ஜில்லா போர்டு, முனிஸிபல் தலைவர்களும் முன் வருவார்களாகில் அது ஆசிரியர்கள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியதாகும். ஆசிரியர்கள் சீர்திருந்துவதின் அளவில் தான். அவர்களைப் புதுமுறையில் பழக்குவதில்தான், அவர்கள்பால் ஒப்புவிக்கப்பட்ட குழந்தைகளின் முன்னேற்றம் அமைந்திருக்கிறது. ஆரம்ப ஆசிரியர்களுக்குச் செலவிடும் பணம், ஆரம்பக் கல்வியை அபிவிருத்தி செய்யவே செலவிடப்பட்டதாகும். எனவே ஸ்தலஸ்தாபனத் தலைவர்கள் முன் வருவார்களா?

எரும்பூர் }
2-3-1940 }

எஸ். குருஸாமி ஐயர்.

தென் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷுரன்ஸ் சொஸைடி லிமிடெட்.

சார்டர்ட் பாங்க் கட்டிடம், மதராஸ்.

மூன்று ஜாக்கிரதை

தென் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷுரன்ஸ் சொஸைட்டியின் பாலிஸிகளின் அடையாளமே "ஜாக்கிறதை" என்பதுதான். பாலிஸிகளுக்கு குறைந்த பிரமியம், நல்ல போனஸ்கள். உங்கள் பணம் முழுவதும் அப்படியே ஜாக்கிரதையாக இருக்கும் என்பது நிச்சயம். ஜாக்கிரதையாக வைத்துக்கொள்ளுதல், குறைந்த கட்டணங்கள், நிரம்பிய போனஸ்கள், இம்மாதிரி எல்லா விதங்களிலும் உங்களுடைய தனம் வெகு ஜாக்கிரதையாக இருப்பதுடன் பெருகிக்கொண்டே வரும் என்று நீங்கள் நிச்சயமாக இருக்கலாம்.

தென் இந்தியா கோவாபரேடிவ் பாலிஸிகளைவிட உயர்ந்தவை கிடையா.

விவரங்களுக்கு எழுதவும் :— வி. வெங்கடாசலம், M.A., B.L.,
காரியதரிசி.

செய்தித் திரட்டு

1940-ஆ மார்ச் மாதத்திய சுற்றுப் பிரயாண சமாசாரம்

1. ஸெயிண்ட் ஜோசப் ஸெகண்டரி ஸ்கூல், திருச்சிறுப்பள்ளி—7—3—1940-ல் 89 பேர்கள் தஞ்சாவூருக்கு போய் வந்தார்கள். 2. ராஜா ஹைஸ்கூல், கொல்லங்காடு—மார்ச் 7-ந்தேதியிலிருந்து 10-ந் தேதிக்குள் 126 பேர்கள் திருச்சூருக்கும் எரணகுளத்துக்கும் போய் வந்தார்கள். 3. ஜி. எச். எப். ஹைஸ்கூல், சேலம்—83 பேர்கள்சேர்ந்து மேட்டூர் அணைக்கு 9—3—40-ல் போய் வந்தனர். 4. போர்டு ஹைஸ்கூல், குத்தாலம்—9—3—40-ல் 48 பேர்கள் சேர்ந்து சிதம்பரம் போய் வந்தனர். 5. ஸேக்ரட் ஹார்ட் ஸ்கூல், பொன்னமலைப்பட்டி—116 குழந்தைகள் சேர்ந்து 10—3—40-ல் அகண்ட காவேரி அணைக் கட்டை பார்த்து வந்தனர். 6. முனிசிபல் ஹைஸ்கூல், பழனி—12—3—40 முதல் 17—3—40 வரை 159 பேர்கள் சேர்ந்து காலடி, கொச்சி, திருச்சூர், மடுக்கரைக்கும் போய் வந்தனர். 7. டிஸ்டிரிக்ட் போர்டு இண்டஸ்டிரியல் ஸ்கூல், தஞ்சாவூர்—34 பேர்கள் சேர்ந்து பொன்மலைக்கும், திருச்சிறுப்பள்ளிக்கும் போய் வந்தனர். 8. புது தரங்கம்பாடி டிரெயினிங் ஸ்கூல், இருங்களூர்—40 பேர்கள் சேர்ந்து 14—3—40-இலிருந்து 17—3—40 வரை புதுக்சேரிக்கு சென்று வந்தனர். 9. ராஜா ஹைஸ்கூல், சிவகங்கை—98 பேர்கள் சேர்ந்து 16, 17 தேதிகளில் மண்டபம், தனுஷ்கோடி, ராமேஸ்வரம் போய் வந்தனர். 10. ஸெயிண்ட் மேரீ உயர்தர ஆரம்ப பாடசாலை, வீரபாண்டியன்பட்டணம்—113 பேர்கள் சேர்ந்து 31—3—40-ல் பாபநாசம் மின்சார சாலையைப் பார்த்து வந்தனர்.

இந்திய சர்க்காராலும், சென்னை சர்க்காராலும் அங்கீகரிக்கப்பட்டு, சென்னை கல்வி அதிகாரியால் வெளியிடப்பட்ட ரெயில்வே சுற்றுப்பிரயாண அறிக்கை.

கல்வியின் ஒரு அங்கமாக சுற்றுப்பிரயாணத்தைக் கருதப்படுகிறது. ஆனால் எல்லா தேசங்களிலும் சுற்றுப்பிரயாணத்தை பள்ளிக் கூடப் பையன்களுக்குக் கொடுக்கக்கூடாதென்பது அறிந்த விஷயம்.

விசாரணையினால் சுற்றுப்பிரயாணத்தினால் ஏற்படும் சாதகங்களை பள்ளிக்கூட அதிகாரிகள் தெரிந்துகொண்டிருந்தும் இந்தியாவில் பல பிரதிகூலங்கள் இருக்கின்றன. பெற்றோர்களுடைய அசிரத்தையும், பையன்களுடைய ஏழ்மைத் தனமும் முக்கியமானவை. இந்த மாதிரியான சுற்றுப்பிரயாணங்களுக்கு ரெயில்வே டிபார்ட்டுமெண்டார் வசதிகளும், சௌகரியங்களும் கொடுக்கிறார்கள் என்பதை பள்ளிக்கூடங்கள் தெரிந்துகொள்ளாமலிருப்பதும் கவனிக்கத் தக்கது.

தென் இந்திய ரெயில்வே கம்பெனியார் இந்த விஷயத்தில் ரொம்பவும் கவனம் செலுத்தி மேற்சொன்ன பிரதிகூலங்களை விலக்குவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் மாகாண ஆசிரியர் சங்கத்தின் உதவியினால் பிரத்தியேகமான உத்தியோகஸ்தர்கள் சுற்றுப் பிரயாணத்தின் முக்கியத்தைப்பற்றி வற்புறுத்த ஒவ்வொரு கல்வி மகாநாட்டுக்கும் அனுப்பப்பட்டார்கள். அதன் பிரயோஜனமாக மாகாண சர்க்கார் மாகாணத்திலுள்ள பள்ளிக்கூட அதிகாரிகளுக்கு கல்வி சுற்றுப் பிரயாணத்தின் பிரயோஜனத்தை பற்றி வற்புறுத்துமாறு கல்வி மேம்பார்வை அதிகாரிகளுக்குச் சுற்றறிக்கை விடுத்திருக்கிறார்கள்.

இதன் பிரயோஜனம் மிகவும் அபிவிருத்தியடைகிறது. இதன் விஷயமாக ரெயில்வே அதிகாரிகள் கொடுக்கக்கூடிய சௌகரியங்களை, சென்னை மாகாண கல்வி அதிகாரிகளும் இதர மாகாண கலாசாலைகளும் பிரயோஜனப்படுத்திக்கொள்வார்கள் என்று நம்பப்படுகிறது.

கோவூர் (ஸ்ரீபெரும்பூதூர் தாலூகா)

ஆரம்ப ஆசிரியர் சங்கம் 1939-ம் ஆண்டு அறிக்கை.

தமிழாசிரியர்கள் தகவுறவேண்டி, அன்னவர் துயரை அடியோடு மாய்க்கத் தன்னலம் விடுத்து அவர்நலம் பேணி அருளறம் பூண்ட அரும் பெருந் தலைவரான அன்பின் மிக்க அவைத்தலைவர் அவர்களுக்கும், ஏனைய கனவான்களுக்கும் சீமாட்டிகளுக்கும் வந்தனம்.

எங்கள் உபாத்திமைச் சங்கத்தின் சார்பாக ஆண்டு அறிக்கைப் பத்திரத்தை வாசிக்குமுன்னர் இன்று நடைபெறும் கொண்டாட்டத்திற்குத் தலைமை வகிக்க ஒப்புக்கொண்டவரும், எம்போன்ற ஆசிரியர்பால் மெய்யன்பும் தண்ணருளும் கொண்டவருமாகிய நமது ஜில்லா கல்வி அதிகாரி ஜனப் மஹம்மது அப்துல் அலி சாஹிப் பஹதூர் அவர்களுக்கும், இன்று நடக்கும் எங்கள் சங்கத்தின் ஆண்டு நிறைவிழாவில் சொற்பொழிவு நிகழ்த்தி எங்கள் அனைவரையும் தன்னைப்போலவே குழந்தைகளுக்காக உழைக்கும்படி தூண்டவந்தவருமான, சைதாப்பேட்டை போதானுமுறைக் கல்லூரி பூகோளப் பேராசியர் திரு. N. சுப்ரமண்ய ஐயர் அவர்களுக்கும், மற்றும் எங்கள் வேண்டுகோளுக்கு இனிது இணங்கி இங்கு விஜயம் செய்துள்ள இச்சங்க நிரந்தரத் தலைவர் அவர்களுக்கும், செங்கற்பட்டு ஜில்லா போர்டு தலைவர் A. S. துரைசாமி ரெட்டியார் அவர்களுக்கும், இங்குக் குழுமியுள்ள மற்றப் பெரியோர்களுக்கும் சீமாட்டிகளுக்கும் எங்கள் நன்றியைக் கூறி நல்வரவு கூறுகின்றோம்.

தோற்றுவாய் :—எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளின் திருவருளினாலே இச்சங்கமானது ஸ்ரீபெரும்பூதூர் ரேஞ்சு குண்ணத்தூர் வட்ட ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு, பல

ஆண்டுகளுக்கு முன் குண்ணத்தூரில் நிறுவப்பட்டது. இப்போது, கோவூருக்கு மாற்றப்பட்டு கோவூர் சென்டர் என வழங்கப்படுகிறது. இச்சங்கத்திற்கு ஸ்ரீபெரும்பதூர் ரேஞ்சு பாடசாலைகளின் பரிசோதகர், நிரந்தரத் தலைவராவர். இக்கழகத்திற்குக் காரியதரிசி, உபகாரியதரிசி, உட்கழகம் முதலியன உண்டு. இவர்கள் ஆண்டுதோறும் பொதுக்கூட்டத்தாரால் தேர்ந்தெடுக்கப்பட்டு நிரந்தரத்தலைவரால் அங்கீகரிக்கப்பட்டு பதவியிலிருப்பர்.

நோக்கங்கள் :—ஆரம்ப ஆசிரியர்கள் அனைவரும் திங்களுக்கு ஓர் முறை கூடி, தங்களிடம் விடப்பட்டிருக்கும் இளஞ் சிறுவர்களுக்குக் கல்வி புகட்டுவதற்குரிய முறைகள் பலவற்றை அறிவதும், கல்வித் துறையில், அறிவிலும் ஆராய்ச்சியிலும் சிறந்தவர்களைக் கொண்டு, விரிவுரைகள் செய்வித்து, அவர்களது அனுபவத்தின் பயனைப் பெற்று ஆரம்பக் கல்வியை ஓங்கச்செய்வதும், உபகரணங்கள் தயாரித்தல், கல்விப் பொருட்காக்ஷிகள் ஏற்படுத்தல், வாசகசாலைகள் ஏற்படுத்தல், தங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட குழந்தைகளை வருங்காலத்திற் சிறந்த தேசமக்களாக வேண்டுமென்பதும், இச்சங்கத்தின் உயரிய நோக்கங்களாகும்.

உருப்பினர்கள் :—இச்சங்கத்திற்கு 23 பாடசாலைகளிலிருந்து ஆசிரியர்கள் வருகின்றனர். கூட்டங்களுக்கு ஆஜரான ஆசிரியர்களின் சராசரி சங்கியை 40. இவ்வாண்டுத் தொடக்கத்திலிருந்து உறுப்பினர்களின் எண்ணிக்கை 55. தற்போது ரோலிலுள்ளவர்களின் சங்கியை 58 ஆகும்.

நடை முறை :—இவ்வாண்டில் பொதுக் கூட்டங்கள் 11-ம் உட்கழகக் கூட்டங்கள் 2-ம் நடந்தன. 9 கூட்டங்களில் நிரந்தரத் தலைவர் விஜயம் செய்தார். அன்னவராலும் ஆரம்பக்கல்வி பத்திராதிபர் திரு. வீரராகவன், ஜில்லா சாரண ஆசிரியர், சென்னை, நகரசபைக் கல்வி அதிகாரி திரு. இரகுநாத அய்யர், சென்னை, கிறித்துவக்கல்லூரி ஆசிரியர் M. S. சபேசன், ஸ்ரீபெரும்பூதூர் தாலூக விவசாய அதிகாரி, சுகாதார அதிகாரி திரு. அ. அ. ஷெணய், குண்ணத்தூர் சுகாதார பரிசோதகர் திரு. P. பத்மனாபம் பிள்ளை, பூனமல்லி உயர்தரப் பாடசாலை ஆசிரியர் திரு. சிவராஜ் இவர்கள் அனைவர்களாலும், மற்றும் சங்க ஆசிரியர்களாலும்.

1. ஆசிரியர்களின் தற்கால நிலைமை 2. ஆரம்பப்பாடசாலைகளில் சாரணர் இயக்கம் 3. ப்ராஜெக்ட், வார்தா கல்விதிட்டம் இம்முறைகளில் கல்வி பயிலுவித்தல். 4. சோளத்திலிருந்து மாவு செய்யும் விதம், 5 பள்ளிக்கூடத் தோட்டங்களை நல்ல நிலைமையில் வைத்திருத்தல், 6. சுகாதார இலாகா அதிகாரிகளுடன் ஒத்துழைத்தல், 7. தற்போது உலகயுத்தத்தின் நிலைமை, 8. புதியபாடதிட்டத்தை அனுசரித்து, பாஷை, கணிதம், பூகோளம் முதலிய பாடங்கள் போதிக்கும் முறை,

9. ரிஜிஸ்டர்கள், ரிகார்டுத் தாள்கள் முதலியன எழுதும் விதம், 10. வாசக தாள்கள் தயாரிக்கும் முறை, 11. இந்த ஜில்லாவில் நடைபெறும் கைத்தொழில்களைக் காட்டும் படங்கள் தயாரித்தல், 12. வருஷாந்தரக் கணக்கு பாரங்கள் பூர்த்தி செய்தல், 13. சிறுவகுப்புப் பிள்ளைகளுக்குத் தகுந்த பாட்டுகள் பாடுதல், 14. பனை ஓலையால் விசிறிகள், தடுக்குகள், கிலுகிலுப்பைகள் முதலியன செய்தல், கயிறு திரித்தல், 15. தேனீ வளர்த்தல், 16. பூஞ்செடிகள், விதைகள், வினியோகம் செய்தல், 17. புதிய பாட திட்டத்தை அனுசரித்தமாதிரி பாடங்கள் முதலியவை நடைபெற்றன.

சென்ற ஜனவரி மாதம் முதல், ஹையர் கிரேடு, பரீக்ஷைக்குப் போகும் ஆசிரியர்களுக்கு செகண்டரிகிரேட் ஆசிரியர்களால் கோவூர் பாடசாலையில் பயிற்சி வகுப்பு ஒன்று நடத்தப்பட்டும் வருகிறது.

பொருள் வருவாய் :—இச்சங்கத்தின் ஒவ்வொரு அங்கத்தினரிடமிருந்தும் வருஷம் ஒன்றுக்கு சந்தா அணு எட்டு வசூலித்து சங்கச் செலவுகள் நடந்து வருகின்றன. இனிமேல் நான்கணு வசூலிக்க அனுமதி யளிக்குமாறு நிரந்தரத் தலைவரைக் கேட்டுக்கொண்டதில், அவர் மேலதிகாரிகளுக்குத் தெரிவிப்பதாகச் சொல்லி இருக்கிறார். தவிரவும், மார்ச்சு மாதத்தில் ஆண்டு விழாக் கொண்டாட்டமும் ஏப்ரலில் 1938-ம் ஆண்டின் வரவு செலவு கணக்குகள் பரிசோதகர்களுடைய குறிப்புடன் வாசித்துக் காட்டி அங்கீகாரம் பெறப்பெற்றது. டிசம்பரில் 1940-ம் வருஷத்தில் நிர்வாகஸ்தர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டது இவ்வாண்டு வரவுத் தொகை ரூ. 45—11—10. செலவுத் தொகை ரூ. 40—14—9. இருப்புத் தொகை ரூ. 4—13—1.

நூல் நிலையம் :—இச்சங்கத்திற்கு இதுகாறும் நூல் நிலையம் இல்லாமல் இருந்து இது விஷயம் ஜில்லா போர்டுக்கு மனுச் செய்துகொண்டதில், குண்ணத்தூர் பஞ்சாயத்து போர்டில் உபயோகிக்காது வைத்திருக்கும் புத்தகங்களை, நமது செண்டர் ஆசிரியர்களுக்கு உபயோகமாகும்படி கொடுக்கும்படி ஜில்லா போர்டார் குண்ணத்தூர் தலைமை ஆசிரியர்களிடம் ஒப்புவிக்கும்படி உத்திரவு செய்திருக்கிறார்கள். சர்க்குலேடிங் புத்தகசாலையும் ஒன்று ஏற்படுத்தவும் நிரந்தரத் தலைவரால் முயற்சி செய்யப்பட்டு வருகிறது பாலர்க் கல்வி, ஆரம்பக்கல்வி, கிராம இந்தியா, இன்னும் சில வாரப்பத்திரிகைகளும் சங்கத்திற்கு வரவழைக்கப்படுகின்றன.

நன்றி கூறல் :—எங்கள் வேண்டுகோளுக்கு இனிது இணங்கி அவ்வப்போது எங்கள் கூட்டங்களுக்குத் தலைமை வகித்து சொற்பொழிவுகள், மாதிரிப் பாடங்கள் நடத்தி, கழகத்தைச் சிறப்பித்தவர்களுக்கும், செயலாலும், சொல்லாலும் எங்களுக்கு உதவிபுரிந்த ஏனையோர்க்கும், குறிப்பாக இக் கழகத்தை கண்ணின் இமையே போல் இடைவிடாது

காத்து அது மேம்படுமாறு வழிகாட்டிவந்த நமது நிரந்தரத் தலைவர் ஸ்ரீ P. சுந்தரேச ஐயர், B. A., L. T. அவர்களுக்கும், விஜயம் செய்திருக்கும் ஏனைய பெரியோர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியை மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இறை வணக்கம் :—நம் கழக காரியங்கள் அனைத்தும் மாலை வெண்மதியம்போன்று மென்மேலும் சிறப்புற்று ஓங்க, உலகம் யாவையும் ஆக்கிய ஒரு முதற் கடவுளின இணையடிகளை எஞ்ஞான்றும், வாயார, மனமார, மெய்யார வழுத்துவோமாக.

கோவூர் சென்டர் }
25—1—1940. }

C. பாலசுப்ரமண்யம்,
K. G. இராமச்சந்திரன்,
காரியதரிசிகள்.

அண்ணூர் அவனுசி தாலூகா

ஆரம்பாசிரியர் சங்கம்.

30-3-40 தேதி சனிக்கிழமை யன்றுமாலை 2 மணிக்குஷ சங்கத்தின் சாதாரணக் கூட்டம் ஒன்று போர்டு ஹையர் எலிமெண்டரி பாடசாலையில் நடைபெற்றது.

அக்கூட்டத்திற்கு கோவை தேசபக்தரும், பாரதமாதா "ஆசிரியருமான ஸ்ரீமான் A. சூரி, B. A., அவர்கள் தலைமைவகித்தார். அவ்வமையம் கூகலூர் தேசபக்தரும், கோவை ஜில்லாபோர்டு உபதலைவருமான ஸ்ரீமான் சுப்பண கவுண்டர் அவர்கள் "மகாத்மாகாந்தி" உருவப்படத்தைத் திறந்து வைத்தும், அவரது உத்தம குணங்களையும் தற்கால இந்தியா" என்பதைப்பற்றியும் மிகத் தெளிவாக எடுத்துரைத்தார்.

பிறகு ஸ்ரீமான் சூரி அவர்கள் முடிவுரையில் ஆசிரியர்கள் எவ்வாறு அரசியலில் ஊக்கம் செலுத்தவேண்டு மென்பதைப்பற்றி சிறு உபமானங்களைக் கொண்டு மிக தெளிவாக உரைத்தார்.

சங்கத்தின் காரியதரிசி வந்தனோபசாரம் கூறியபின் "வாழிய செந்தமிழ்" பாட்டுடன் கூட்டம் இனிது கலைந்தது.

ஆரம்பா சிரியசங்கம், }
அண்ணூர். }

அ. பவானி சங்கரய்யர்,
காரியதரிசி.

ஸ்ரீ வில்லிப்புத்தூர் தாலுக்கா

வத்ராயிருப்பு சென்டர் ஆசிரியர்கள் சங்கம்.

16—3—40 சனிக்கிழமை நாடார் எலிமெண்டரி வித்யாசாலை கட்டிடத்தில் புதுப்பட்டி ஸ்ரீ ரேணுகா ஹிண்டு ஹையர் எலிமெண்டரி ஸ்கூல் ஆசிரியர் T. R. கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்கள் தலைமையின்

கீழ் காலை 9½ மணிக்கு ஷை சங்கம் கூடிற்று. அவ்வமயம் கீழ்க்கண்ட மூன்று தீர்மானங்களும் ஏகமானதாய் தீர்மானிக்கப் பட்டன:—

(1) பாடசாலை நாட்கள் 220 ஆக உயர்த்தப்பட்டால் கிரிஸ்த்மஸ், கோடைவிடுமுறை நாட்களை குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதால் இச்சங்கம் பாடசாலை வேலைசெய்யும் நாட்கள் முன்போல் 200 நாட்கள்தான் இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறது.

(2) சில ஆரம்ப பாடசாலைகளில் நாள் ஒன்றுக்கு ஆறுமணிநேரம் வேலைசெய்கிறார்கள். ஆரம்ப பாடசாலை பிள்ளைகள் இளவயதுள்ளவர்களாயும் அதிகநேரம் பாடத்தில் கவனம் செலுத்த இயலாதவர்களாயும் இருப்பதால் பள்ளிக்கூடநேரம் உயர்ந்தபக்ஷம் ஐந்துமணிக்குமேல் அதிகப்படாமலிருக்கும்படியாக இச் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

(3) சில மானேஜ்மெண்ட் ஸ்கூல்களில் காஷுவெல்லீவ் சரக்கார் திட்டப்படி 15 நாட்கள் அநுபவிக்க விடாமல் குறைந்த நாட்கள் மட்டும் கொடுத்துவிட்டு பாக்கி நாட்களுக்கு சம்பளப் பிடித்தத்தின்பேரில் லீவு கொடுக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட பள்ளிக்கூடங்களின் மானேஜர்களை கட்டாயம் 15 நாட்கள் காஷுவல் லீவ் கொடுக்கும்படு வற்புறுத்த வேணுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வத்ராயிருப்பு } 20—3—40 }

சி. சுப்பைய செட்டியார்,
காரியதரிசி.

சேலம் ஜில்லா (நாமக்கல் தாலூகா)

ஜில்லா போர்டு ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன்

ஷை யூனியனை ஸ்தாபிக்க 24-2-39 தேதியுள்ள G. O. 416-ஐ முன்னிட்டு ஷை தாலூகாவிலுள்ள ஜில்லா போர்டு, பஞ்சாயத் ஆரம்ப ஆண் பெண் பாடசாலை உபாத்யாயர் உபாத்தினிகளின் மகா சபை கூட்டம் 28-1-40 ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்கு நாமக்கல்லில், நாமக்கல் கோட்டை போர்டு பாடசாலை எட்மாஸ்டர் ஸ்ரீ S. R. இராமராவ் அவர்கள் தலைமையில் கூடியது. அன்று ஆஜரான உபாத்தியாயர்கள் 79. ஷை கூட்டத்திற்கு ரேஞ்சு ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ V. K. சேஷாத்ரி, B. A., L. T. அவர்களும் விஜயஞ் செய்திருந்தார்.

யூனியன் விதிகள் மஹாசபையாரால் நீண்ட நேரம் ஆலோசிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன. 1940-ம் வருஷத்துக்குப் பின் கண்டபடி யூனியன் காரியக் கமிட்டி மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர் :—S. இரகுபதி அய்யர்-முத்துப்பட்டி.
காரியதரிசி :—S. இராஜகோபால் அய்யர்-நஞ்சுண்டாபுரம்
கஜான்ஸி :—S. R. இராமராவ்-நாமக்கல்

கமிட்டி மெம்பர்கள்

(1) சஞ்சீவி ராவ்-இருட்டணைபுதூர், பஞ்சாயத்து
(2) இராமசாமி நாயுடு-பெருமாபட்டி, பஞ்சாயத்து
(3) துரைராஜ்-நாமக்கல், பெண் பாடசாலை
(4) நாகரத்னம்-மோஹனூர் பெண்பாடசாலை
(5) M. S. கிருஷ்ணைய்யா-மோஹனூர்
(6) V. K. இராமசாமி-மோஹனூர்
(7) காதர் மொய்தீன் சாயபு-சேந்தமங்கலம், மகமடன் ஸ்கூல்
(8) நடேச கவுண்டர்-சேந்தமங்கலம் ஹிந்து ஸ்கூல்.

கனம் டிப்டி இன்ஸ்பெக்டர் அவர்களுக்கும் கன்வீனரும் அன்று பிரஸிடெண்டுமாகிய S. R. இராம இராவ் அவர்களுக்கும் வந்தனோப சாரங் கூறியபின் கூட்டம் இராஜ வாழ்த்து தேச வாழ்த்துக்குப் பின் இனிது கலைந்தது.

S. இராஜகோபால அய்யர்
காரியதரிசி
எட்மாஸ்டர், போர்டு உயர்தர பாடசாலை, நஞ்சுண்டாபுரம்,

16-2-40.
நாமக்கல்

மாயவரம் தாலூகா

திரவிய சகாய ஆரம்ப ஆசிரியர் ஐக்கிய கழகம்

2—3—'40 சனிக்கிழமை மாலை 5 மணி முதல் 7 மணி வரையில் மாயவரம் நந்தவனத்திலுள்ள முனிசிபல் ஆரம்பப் பாடசாலையில் மாய வரம் தாலுக்காவிலுள்ள சர்க்கார் திரவிய சகாயம் பெறும் சகல ஆரம் பப் பாடசாலைகளிலுமுள்ள ஆரம்ப ஆசிரியர்கள், ஆசிரியைகள், ஆசிரிய மானேஜர்கள், முதலியவர்களின் யூனியன் சர்க்கார் உத்திரவுக்கிணங்க, மாயவரம் தொகுதி கல்விக் கழகத் தலைமைக் கண்காணிப்பாளர், திரு. T. P. சீனுவாசன், B.A.L.T., (மாயவரம், சீர்காழி தாலுக்காக்களின் உதவி ஜில்லா சாரணக் கமிஷனர்) அவர்கள் தலைமையில் இத்தாலுக்கா விலேயே முதன்முதலாக திரு. A. S. K. வடிவேல் அவர்கள் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வமயம் மாயவரம் தொகுதி கல்விக் கழக உப கண்காணிப்பாளர் திரு. S. சந்திரசேகரம் பிள்ளை அவர்களும் மேற்படி தாலுக்காவிலுள்ள சுமார் 200 ஆரம்ப ஆசிரியர்களும் விஜயம் செய்திருந் தார்கள்.

அவ்வமயம் ஷை யூனியன் "மாயவரம் தாலுக்கா திரவிய சகாய ஆரம்ப ஆசிரியர் ஐக்கியக் கழகம்" என்னும் பெயரால் நிறுவப்பட்டு, கழக நிர்வாகிகள் அனைவரும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின. (1) சென்னை அரசாங்கத்தார் 24—2—1939-ல் வெளியிட்ட Ms. 114 E. உத்திரவில் கண்டவையே இக்கழகத்தின் நோக்கமாகும். (2) இத்தாலுக்காவிலுள்ள திரவிய சகாய ஆரம்பப் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள் அனைவரும் இக்கழகத்தினர் அங்கத்தினர் ஆகலாம். (3) அங்கத்தினராகச் சேர்வதற்கு வருடத்திற்கு மூன்று அணு வீதம் சந்தா செலுத்தவேண்டும். (4) இக் கழகம் தேர்ந்தெடுக்கப்பட்ட, கழக நிர்வாகிகளால் நிர்வகிக்கப்படும். (5) இக்கழகத்தின் அங்கத்தினர் அனைவரும் அடங்கிய பொதுக்கூட்டம் வருடத்திற்கு ஒரு முறையேனும் நடைபெறவேண்டும்.

இதைக் கண்ணுறும் மாயவரம் தாலுக்காவிலுள்ள அன்பார்ந்த ஆசிரியர்களே ! நீங்கள், உங்கள் மூன்று அணு சந்தா தொகையை உங்கள் சரகத்திலுள்ள கழக நிர்வாக அங்கத்தினர்களிடமாவது, பொக்கிஷதரர், காரியதரிசிகளிடமாவது செலுத்துவதோடு, உங்கள்பால் அன்பு பூண்டுள்ள இதர ஆசிரியர்களையும் இக்கழகத்தின் அங்கத்தினராக்குவதற்கு அருமுயற்சி எடுத்துக்கொள்ளுங்கள் !!

மேலும் இதைக் கண்ணுறும் இதர தாலுக்காக்களிலுள்ள ஆசிரியர்களே ! இனியும் உறங்காது ஊக்கங்கொண்டு எழுந்து, உங்கள் தாலுக்காக்களிலும் இத்தகைய யூனியன் ஏற்படுத்த முன்வாருங்கள் !

மேற்கண்ட யூனியன் சம்பந்த சகல கடிதப் போக்குவரத்தை தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு அறிவிக்கவும். காரியதரிசி, மாயவரம் தாலுக்கா ஆரம்ப ஆசிரியர் ஐக்கியக் கழகம், ஆக்கூர் போஸ்டு.

A. S. K. வடிவேல்,
காரியதரிசி.

தென் இந்திய ஆசிரியர் ஐக்கிய காப்பு நிதி

காலஞ்சென்றனர்

கீழ்கண்ட இரண்டு ஆசிரியர்கள் காலஞ்சென்ற செய்தியைக் கேட்க நாம் வருந்துகிறோம்:

நம்பர்	பெயர்	வயது	இறந்ததேதி	காப்புதொகை
*1127	ஸ்ரீ A. K. வரதராஜலு நாயுடு, முனிசிபல் ஹைஸ்கூல், கர்னூல்.	40	10—3—1940	296—4—0
164	ஸ்ரீ T. M. ராகவேந்திர ராவ்	54	29—3—1940	321—4—0

* இத்தொகை 21—3—'40 வார்சுதாருக்குக் கொடுக்கப்பட்டது.

520, ஹைரோட்,
திருவல்லிக்கேணி
9—4—1940

வி. ஸ்ரீனிவாசன்,
காரியதரிசி

காகித அட்டைவேலை

(K. பார்த்தஸாரதி, கமுதி.)

3. சொருகுப் பெட்டி

தீப்பெட்டியைப் போல ஒரு சொருகுப் பெட்டி செய்வதற்கு வேண்டிய சித்திரங்களும் குறிப்புகளும் இதில் காணப்படும். சித்திரம் 1. பெட்டியும் மூடியும் சேர்ந்த உருவம். சித்திரம் 2. பெட்டியின் அளவுப் படம்; சித்திரம் 3. மூடியின் அளவுப் படம். அளவுப் படங்களைக் கவனித்துப்பார்.



சி. 1



சி. 2.



சி. 3.

முதலில் பெட்டியைச்செய். வர்ணஅட்டை இதற்குக் கொஞ்சம் மெல்லியதா யிருக்கும். ½ பவுண்டு அட்டை இதற்குத் தகுதியானது. பெட்டியின் அளவுப் படத்தை (சி. 2) ½ பவுண்டு அட்டையில் அளவிற்குச் சரியாகவரை. நேர்கோடுகளுக்குச் சரியாகக் கத்தரி. புள்ளிக்கோடுகளில் கீறி, கீறினபக்கம் வெளியில் இருக்கும்படி நன்றாகமடி. நான்கு மூலைகளிலுமுள்ள ஒட்டுப் பாகங்களை பெட்டியின் அகலப் பக்கங்களில்

மடித்து ஒட்டு. ஒட்டுப் பாகங்களைக் குறிக்க சாய்வுக் கோடுகள் வரையப்பட்டிருக்கின்றன. ஒட்டுப் பாகங்களை அகலப் பக்கங்களின் வெளியில் ஒட்டுவது வழக்கம். ஆனால் உள்பக்கம் ஒட்டினால் அழகாக இருக்கும். ஒட்டின அட்டைகளின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு மெல்லிய பலகை அல்லது கெட்டி அட்டைத் துண்டுகளை வைத்து விரல்களால் அழுத்திப்பிடி. பக்கங்களை ஒட்டும் பொழுது பெட்டியின் உருவம் சரியாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

பெட்டி நன்றாக அமைந்ததும் மூடியைச் செய்யலாம். மூடியின் அளவுப்படத்தை (சி. 3) அட்டையில் வரை. நேர்க்கோடுகளுக்குச் சரியாகக்கத்தரித்துப் புள்ளிக் கோடுகளுக்குச் சரியாகக் கீறிமடி. பெட்டியைச் சுற்றி மூடியைவைத்து மடி. ஒட்டுப்பாகத்தில் பசையைத் தடவி அது மூடியின் உள்பக்கத்தில் இருக்கும்படி ஒட்டு. மூடிக்குள் பெட்டி சுலபமாய்ப் போய்வருகிறதா என்று பார். இல்லாவிடில் மூடி ஒட்டிக்கொள்வதற்குள் ஒட்டுப் பாகங்களைத்தக்கபடி நகர்த்திவை

இம்மாதிரி ஒட்டுவேலைக்குப் பசைகொஞ்சம் கெட்டியாக இருக்க வேண்டும். ஒரு சுத்தமான பீங்கான் பாத்திரத்தில் பசையைவைத்து அடிக்கடி காற்றுப்படாமல் மூடி வைத்திருந்தால் அது 4, 5 நாள்வரையில், ஏன் ஒருவாரம்கூடக், கெடாமலிருக்கும்.

S. I. T. U. Protection Fund

(Registered under the Insurance Act.)

ஏஜண்டுகள் தேவை

ஏஜண்டாக இருக்க விரும்புகிறவர்கள் இன்ஷ்யூரன்ஸ் சட்டம் 42-ன் பிரிவின்படி, வருஷாவருஷம் ரூ. 1 செலுத்தி, லைசென்ஸ் (license) பெற்றுக்கொள்ள வேண்டும்.

520, High Road,
Triplicane
6—3—'40

வி. ஸ்ரீனிவாஸன்,
காரியதரிசி.

பத்திராதிபர் குறிப்புகள்

அம்பாசமுத்திரம்

தென்னிந்திய மாகாணக்கல்வி மகாநாடு அம்பாசமுத்திரத்தில் மே மாதம் கடைசி வாரத்தில் கூடப்போகிறது. சர்க்கார் வைத்திய கலாசாலைத் தலைவரான திருவாளர் லக்ஷ்மணசுவாமி முதலியார் அவர்கள் தலைமை வகிப்பார்கள். ஆங்காங்குள்ள ஆசிரியர்களின் சௌகரியத்தின் பொருட்டு அச்சமயம் ஆசிரியர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினர்களுக்கும் பிரத்தியேகமாக வண்டித் தொடர் விடுவதைப் பற்றித் தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியார் தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தாருடன் கலந்துகொண்டு ஏற்பாடு செய்து வருகிறார்கள். சென்னையிலிருந்து 200 பிரயாணிகளும், போகும் மார்க்கத்தில் நூறுக்கு மேற்பட்ட ஆசிரியர்களும் சேருவதானால் ரெயில்வே கம்பெனியார் குறைந்த தொகைக்குச் சௌகரியமாகப் பல இடங்களுக்குப் பிரயாணிகளை அழைத்துச் செல்வதுடன் சாப்பாட்டு சௌகரியத்தையும் கவனிக்கத் தயாராயிருக்கிறார்கள். சிதம்பரம், தஞ்சை, திருச்சி, இராமேஸ்வரம், பழனி, மதுரை, திருச்செந்தூர், திருநெல்வேலி, ஆழ்வார் திருநகரி, அம்பாசமுத்திரம், திருவனந்தபுரம், கன்யாகுமாரி, ஜனார்த்தனம், தென்காசி, குத்தாலம், ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீரங்கம் முதலிய இடங்களில் ஆசிரியர்கள் தங்கி காட்சிகளைப் பார்க்க ஏற்பாடுகள் செய்யப் படும். இச்சுற்றுப் பிரயாணத்திற்கு சாப்பாடு உள்பட பிரயாணிகள் ஒவ்வொருவரும் செலுத்தவேண்டியது ரூபாய் முப்பதுதான். மத்தியில் குறிப்பிட்ட இடங்களில் சேர்ந்துகொள்ளும் ஆசிரியர்களிடம் சற்றுக் குறைவாக தொகை வசூலிக்கப்படும். பிரத்தியேகமான வண்டியில் சௌகரியங்கள் பல இருப்பதாலும், பல இடங்களைப் பார்க்கக் கூடுமானதாலும் ஆசிரியர்கள் தாமதிக்காமல் தென்னிந்திய ஆசிரியர் சங்கத்திற்கு தங்களுடைய விருப்பத்தைத் தெரிவிப்பது அவசியம். இந்தக்கல்வி மகாநாட்டில் ஆரம்பக்கல்வி சமபந்தமாக சிலமுக்கிய பிரேரேபணைகளை ஆலோசனைக்குக் கொண்டு வருகிறார்கள். இந்த இதழில் வேறிடத்தில் வெளியிடப்பட்டிருக்கும் பிரேரேபணைகளை நேயர்கள் கவனிக்கவும். ஸெர்விஸ் ரிஜிஸ்டரால் கஷ்டம் தீராதென்றும், குறிப்பிட்ட காரணங்களுக்கு மாத்திரமே வேலையைவிட்டு ஆசிரியர் நீக்கப்படலாமென்றும் ஒரு பிரேரேபணையில் கண்டிருக்கிறது. ஆசிரியர்களுடையவும், குழந்தைகளுடையவும் கஷ்டங்களை உத்தேசித்து ஒருநாளைக்கு ஐந்துமணி வீதம் இருநூற்றிருபது நாட்கள் பள்ளிக்கூடம் நடத்துவது சரியல்லவென்று கூறுவது மற்றொரு பிரேரேபணை.

ஆரம்பக்கல்வி சம்பந்தமாக அமுலிலிருந்துவரும் சர்க்கார் திட்டத்தின் பலாபலனை விசாரணை செய்தல் அவசியமென்றும் ஆசிரியர்களுக்கும்

மானேஜர்களுக்கும் சந்தேகமில்லாதபடி ஆரம்பக்கல்விக்காக சர்க்கார் கொடுக்கும் கிராண்டு சம்பந்தமான விதிகளை மாற்றவேண்டுமென்றும் இரண்டு பிரேரேபணைகளில் அடங்கியுள்ளன. கடைசியாக, தற்காலம் டீசர் மானேஜர்களின் கஷ்டத்தை உத்தேசித்தும் அவர்களும் ஆசிரியர்களும் ஒருவரோடொருவர் நேசம் பாராட்டி ஒத்துழைக்கும் பொருட்டும் டீசர் மானேஜர்கள் தங்கள் பள்ளிக்கூடங்களை ஆசிரியர் கூட்டுறவு பள்ளிக்கூடங்களாக மாற்றக்கூடுமாவென்பதை யோசிக்கும் படி ஒரு பிரேரேபணை டீசர் மானேஜர்களை வேண்டிக்கொள்கிறது.

மேலே கூறிய பிரேரேபணைகள் முக்கியமானவை என்று ஆரம்ப ஆசிரியர்கள் அறிவார்கள். தம் மனதிலுள்ள எண்ணத்தையும் தங்களுடைய அபிப்பிராயத்தையும் அவர்களே மகாநாட்டில் எடுத்துக் கூறுதல் அவசியம். மகாநாட்டில் ஆரம்பக் கல்விக்கென்றே சாவகாசம் கொடுக்கப்படுமென்று நாம் அறிகிறோம். எங்களை யார் கவனிக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டிராமல் பல ஜில்லாக்களிலுள்ள ஆரம்ப ஆசிரியப் பிரதிநிதிகள் மேலே கூறிய பிரேரேபணைகளைப்பற்றியும் ஆரம்பக் கல்வியை ஒட்டிய வேறுவிஷயங்களைப்பற்றியும் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்க முன்வருவார்களென்று நாம் நம்புகிறோம். தம் கொள்கைகளைக் கட்டுரையாக 'பாலர் கல்விக்கு' அனுப்பினால் அதை அடுத்த இதழில் பிரசுரம் செய்யக்கூடும். மகாநாட்டுக்கு வரும் பிரதிநிதிகளுக்கு கட்டுரைகள் பேருதவி செய்யலாம். ஆரம்ப ஆசிரியப் பிரதி நிதிகள் இச்சமயத்தை நழுவ விடாமல் தங்கள் பொறுப்பை வகித்து மகாநாட்டிற்கும் அதிகாரிகளுக்கும் தலைவர்களுக்கும் தகுந்த வழியைக் காட்டுவார்களென எதிர்பார்க்கிறோம்.

நான் சேர்வானேன்!

ஆரம்ப ஆசிரியர்கள் தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் நோக்கத்தையும் உழைப்பையும் பலவிடங்களில் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை என்று சங்கத்தில் ஈடுபட்டுள்ள முக்கிய தொண்டர்கள் நமக்குத் தெரிவிக்கிறார்கள். "நான் சேர்வானேன்?" என்று ஆசிரியர் கேட்பதாகவும் நாமறிகிறோம். ஆரம்ப ஆசிரியர்களின் நிலைமை வருந்தத்தக்கதென்று மேடையில் பேசிவிட்டுப் பின்பு சும்மா விருப்பதால் நிலைமை உயரமாட்டாது. ஆசிரியர்களின் முயற்சியாலேயே நிலைமை உயரக்கூடுமென்று அவர்கள் அறிதல் அவசியம். தென்னிந்திய ஆசிரியர் சங்கம் ஆரம்ப ஆசிரியர்களின் கஷ்டங்களெல்லாவற்றையும் நினைத்த மாத்திரத்தில் விலக்கக்கூடுமென்று எந்த ஆசிரியர்களும் நினைக்கமாட்டார்கள். பொதுவாகவே எல்லா ஆசிரியர்களின் நிலைமையும் தாழ்ந்திருப்பதை யாவருமறிவார்கள். உயர்தரப் பள்ளிக்கூடங்களிலுள்ள ஆசிரியர்களும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலுள்ள ஆசிரியர்களும் ஒன்றுசேர்ந்தே தாம் நிலைமையை உயர்த்திக்கொள்ள முடியும். மணலைக் கயிறாகத் திரிக்க

முடியுமென்றே, அல்லது வானை வில்லாக வளைக்க முடியுமென்றே, தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தில் ஈடுபட்டவர்கள் சொல்லவில்லை. ஆசிரியர்களின் தாழ்ந்த நிலைமையை அதிகாரிகளும், தலைவர்களும், அறிந்திருப்பதுடன் ஒத்துக்கொண்டுமிருக்கிறார்கள். ஆசிரியர்கள் கூறுவது நியாயமென்றும், அவர்களைத் திருப்தி செய்வது அவசியமென்றும் பல சமயங்களில் வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆனால் வேறு இலாகாக்களில் அவசியமானதைச் செய்யத் தயங்குவதில்லை. கல்வி இலாகாவிலோ பணமில்லை என்று அதிகாரிகளும் தலைவர்களும் பல்லவி பாடுகிறார்கள். ஆசிரியர்கள் சம்பளத்திற்காக வேலை செய்வதாக நினைக்கக்கூடாதென்றும், குழந்தைகளின் படிப்பில் ஈடுபட்டவர்கள் தியாகஞ் செய்யத் தயாராயிருக்க வேண்டுமென்றும், பல தலைவர்கள் பேசுவதை நாம் அறிவோம். மேலும், இப்பொழுது ஆசிரியர்கள் செய்யும் வேலை பாராட்டக்கூடியதல்லவென்றும், சம்பளம் உயர்த்துவது அவசியமில்லை என்றும் சிலர் கூறுகின்றனர். ஆகவே, பாடசாலைகளைப்பற்றியும் ஆசிரியர்களின் கஷ்டங்களைப்பற்றியும் பொதுஜனங்கள் அறியவில்லை என்பது நிச்சயம். பாடசாலைகளை நிர்வாக சம்பந்தமான சர்க்காரின் பொது நோக்கத்தையும் திட்டத்தின் குறையையும் ஜனங்கள் அறியவில்லை.

ரஷியாவில் நூற்றுக்கு நூறுபேர் சில வருஷங்களுக்குள் படிப்பாளிகளாகத் தேர்ச்சியடைய முடிந்ததேன்? எழுத்துக்கள் கூட இல்லாத சில பிரதேசங்களில் ரஷிய சர்க்கார் ஜனங்களைப் படிப்பாளிகளாக எப்படிச் செய்ய முடிந்தது? நம்மாகணத்தில் 'இது முடியாது, அது முடியாது' என்ற வார்த்தைகளே வருஷக்கணக்காக வழங்கி வருவானேன்? பொதுஜனங்களும் தலைவர்களும் கல்வியின் அவசியத்தை சரியாக அறியாததால் பொறுப்பை வகிக்கத் தயங்குகிறார்கள். அவர்களுக்கு உண்மையை விளங்கச்செய்தாலொழிய ஆசிரியர்கள் முன்னேற்றமடைவது கடினம். பலாத்கார வழியாலோ, கடினமான தீர்மானங்களாலோ, ஓயாத பேச்சாலோ, நமது எண்ணம் நிறைவேறுவது கஷ்டம். சங்கத்திலுள்ள மெம்பர்களின் சங்கியையாலேயே நமது எண்ணம் கைகூடாது. நமது காரியம் கைகூடுவதற்குப் பொதுஜனங்களின் நம்பிக்கையும் நன்மதிப்பும் அவசியம். அவற்றைப் பெறும் வழியைத்தேடுவதே தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் நோக்கமாகும். ஆசிரியர்கள் வேலையில் தேர்ச்சி பெற்றவர்கள்; குழந்தைகளிடம் பற்றுள்ளவர்கள்; பொறுப்பைத் தாமே வகிக்கக்கூடியவர்கள்; சுயமதிப்பைப் பாராட்டுபவர்கள்; தேச முன்னேற்றத்தில் ஈடுபட்டவர்கள் என்ற கொள்கையும் நம்பிக்கையும் பொது ஜனங்களிடம் வேரூன்றிவிடின் தலைவர்களும் அதிகாரிகளும் அசட்டை செய்ய முடியாது. பொது ஜனங்களின் அன்பையும் நம்பிக்கையையும் பெறுவதற்கான திறவுகோல் ஆசிரியர்களிடம் இருக்கவேண்டும். ஆசிரியர்களெல்லோரும் ஒன்று சேர்ந்து பொதுஜன நம்பிக்கையைப் பெறும் வழிகளைக் கையாளுவது அவசியம். இது இலகுவானதல்ல. ஆனால் வேறு வழி ஏதுமில்லை என்பதை ஆசிரியர்கள் அறியவேண்டும்.

ஆரம்ப ஆசிரியர்கள் ஆசிரிய சங்கங்களில் சேர்வது அவசியம். இவர்கள் தென்னிந்திய ஆசிரியர் சங்கத்திலாவது, அதன் ஜில்லா கிளைச் சங்கங்களிலாவது சேரலாம். வருஷத்திற்கு இரண்டணு கட்டணம் கொடுத்து ஆரம்ப ஆசிரியர் எல்லா உரிமைகளுடன் தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் மெம்பராகலாம். எல்லா ஆசிரியர்களும் நல்ல நோக்கத்துடன் ஒன்றுசேர்ந்து உழைத்துவரின் சங்கம் வலுவடையும். அப்போது பொது ஜனங்களும் தலைவர்களும் அதிகாரிகளும் ஆசிரியர்களின் தொழில் வன்மையையும் பொறுப்பையும் எளிதாக அறியமுடியும். சங்கத்தை அனுசரித்துப் போவதாலேயே கல்வியின் முன்னேற்றத்தை அடைய முடியுமென்றும் அவர்கள் அறிவார்கள்.

தற்காலம் ஆசிரியர்களும் அதிகாரிகளும் கல்விமுறையில் ஒத்துழைத்தல் அவசியம். அதிகாரிகள் ஆசிரியர்களின் குறைகளை நீக்கி அவர்களைப் பொறுப்பை வகிக்கும் வழியில் வைக்க வேண்டும். ஆசிரியர்களும் தம்மாலியன்ற வரையில் ஊக்கத்துடன் உழைக்கத் தயாராயிருக்கவேண்டும். உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற மனப்பான்மையை விட்டுவிட்டு குழந்தைகளின் கல்வியின் பொருட்டு இரு கட்சியாரும் ஒரே மனதுடன் ஒத்துழைக்கும் குணத்தை நம்மாகாணத்தில் போற்றுவதே ஆசிரியர் சங்கத்தின் நோக்கமாகும்.

உபாத்தியாயர்களின் கைப் புத்தகம்

திருச்சி ஆசிரியர் சங்கத்தினரால்
பிரசுரிக்கப்பட்டது

*

ஆரம்பப் பாடசாலை பாடதிட்டம், ரிப்
ரெஷர் கோர்ஸில் பல பெரியார் செய்த
உபந்நியாசங்கள் அடங்கியுள்ளது

விலை இரண்டு ரூபாய்

*

கிடைக்குமிடம் :

திருச்சி ஆசிரியர் சங்கம் அல்லது S. T. ராமானுஜ ஐயங்கார், 44, ஆண்டாள் தெரு, திருச்சி.